பக்கங்கள்: 8

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 6-00

சுடர் 11 வள்ளுவர் ஆண்டு 2026 மார்கழி 16 திங்கட்கிழமை (01-01-1996) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 36

# மட்டக்களப்பு நகர்ப் புறத்தில் நேற்று புலிகளின் அதிரடிக்கு 4படை யினர் பலி!

சாவகச்சேரி, ஜன. 1

மட்டக்களப்பின் பெரிய கல்லாறில் நேற்றுக் காலை 3 40 மணிக்கு விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதலில் 4 படையினர் கொல்லப் பட்டுள்ளனர். ஆயுதங்களும் புலிகளால் கைப்பற்றப்பட்டுள்ளன.

மட்டக்களப்பு மாவட்ட நகர்ப்புறமான கல்லடித்தெரு இராணுவ முகாமுக்கு பாது காப்பாக பெரியகளப்பு என்னும் இடத்தில் நின்ற இராணுவம் மீதே இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டது.

10 நிமிடமே நடந்த இத் தாக்குதலில் நான்கு இராணுவத்தினர் அந்த இடத்திலேயே கொல்லப்பட்டனர். ஏனைய இராணுவத்தினர் புலிகளின் தாக்குதலுக்கு முகம் கொடுக்க முடியாத நிலையில் தப்பி ஓடியதாக அறிவிக்கப்பட்டது. (உ-3)

## புலிகள் கைப்பற்றிய ஆயுத தளபாடங்கள்

சாவகச்சேரி, ஜன. 1

மட்டக்களப்பில் நேற்று நடத்திய தாக்குதலில் புலிகள் கைப்பற்றிய ஆயுத தளபாடங்கள் வருமாறு:-

| | | |
|---|---|---|
| ★ ஏ.கே.எல்.எம்.ஜி. | — | 1 |
| ★ அதற்குரிய ரம் மகஸின் | — | 1 |
| ★ லிங்குடன் ரவை | — | 485 |
| ★ ஏ கே. துப்பாக்கி | — | 3 |
| ★ மகஸின் | — | 22 |
| ★ செற் | — | 2 |
| ★ கிளைமோர் | — | 2 |

(8 ஆம் பக்கம் பார்க்க)

# பேச்சுக்கு வாய்ப்பு இல்லை; இனி சண்டையே தொடரும்!

## மலையக இளைஞர் 21 பேர் தடுத்துவைப்பு

1994 ஆம் ஆண்டில் ஸ்ரீலங்கா படையினரால் கைது செய்யப்பட்ட— மலையகத்தைச் சேர்ந்த - 21 தமிழ் இளைஞர்கள் களுத்துறை, வெலிக்கடை சிறைகளில் விசாரணையின்றி நீண்ட காலம் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (உ-3)

## பி.பி.ஸியின் கணிப்பு இது

லண்டன், ஜனவரி. 1

பேச்சுவார்த்தை தொடர்பாக ஸ்ரீலங்கா அரசு, தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் இரண்டுமே ஒன்றுக் கொன்று ஏற்றுக்கொள்ள முடியாத நிபந்தனைகளையே விதிப்பது பால் தெரிகின்றது. இதனால் சமாதானப் பேச்சுக்கு இப்போதைக்கு வாய்ப்பு இல்லை: சண்டை தொடரும் நிலையே நீடிக்கின்றது.

— இவ்வாறு இலங்கை நிலையைக் கணிப் பீடு செய்திருக்கின்றது பி. பி. ஸி. செய்தி நிறுவனம்.

பி. பி. ஸியின் கொழும்புச் செய்தியாளர் ஜோர்ஜ் ஆனி இலங்கை நிலைவரம் குறித்து வெளியிட்ட கணிப்பீட்டின் சுருக்கம் வருமாறு:-

புலிகள் தமது பலமான கோட்டையான யாழ்ப்பாணத்தை இழந்த பின்னர், கிழக்கில் பெரும் எடுப்பில் தாக்குதல்களை நடத்தி அங்கு தமது நடவடிக்கையைத் தீவிரப்படுத்தியுள்ளனர்.

இதனால் நிலைமையைச் சமாளிப்பதற்கு கூடுதல்

(8 ஆம் பக்கம் பார்க்க)

## அமைதித் தீர்வு ஏற்படும் வரையும் புனரமைப்பு வேலை வேண்டாம்

### உலக வங்கிக்கு பிரசைகள் குழு மகஜர்

சாவகச்சேரி, ஜன. 1

தமிழ் மக்களின் அரசியல் வேட்கைகளை நிறைவு செய்யக்கூடிய முழுமையான அமைதித் தீர்வொன்று கொண்டு வரப்பட்டு இடம் பெயர்ந்த மக்கள் தம்சொந்த இருப்பிடங்களுக்கு மீண்டு தன்மானத்துடனும் மதிப்புடனும் அச்சமின்றி வாழும் நிலை தோன்றும் வரை —

இராணுவம் ஆக்கிரமித்துள்ள பகுதிகளில் புனரமைப்பு, புனருத்தார வேலைகள் ஒத்திவைக்கப்படவேண்டும்.

இலங்கையில் சமாதானம் ஏற்பட்ட பின்னர் புனரமைப்பு, புனர்நிர்மாண வேலைகளைச் செய்வதற்கென சிறிலங்காவுக்கு உதவி வழங்கும் நாடுகளின் ஒன்றியம் ஒதுக்கிய நிதியிலிருந்து தான் ஆக்கிரமித்த பகுதிகளில் புனர்நிர்மாண வேலைகளைச் செய்ய அரசு முனைந்துள்ளதை அனுமதிக்கக் கூடாது!

—இவ்வாறு யாழ். பிரசைகள்குழு, கடந்த 30 ஆம் திகதி பொதுநலவாய நாடுகள், உலக வங்கி, சர்வதேச நாணய நிதியம், ஐரோப்பிய நாடாளுமன்றம், பி. பி. சி. உலக சேவை ஆகியவற்றுக்கு அனுப்பிய மகஜரில் கேட்டுள்ளது.

அரசாங்கம் புனர்நிர்மா

(8 ஆம் பக்கம் பார்க்க)

## தமிழரின் தாயகக் கோட்பாட்டை ஏற்க முடியாது என்கிறார் சந்திரிகா

கொழும்பு, ஜன. 1

தாயகக் கோட்பாடு என்ற ரீதியில் பிரச்சினைகளை அணுகுவது ஆபத்தையே தரும். அதனை ஏற்க முடியாது.

— இவ்வாறு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்துக்கு அளித்த பேட்டியில் தெரிவித்துள்ளார்.

அப்பேட்டியில் அவர் கூறிய முக்கிய கருத்துக்கள் வருமாறு:-

★ தமிழ்க் கட்சிகள் வெறுமனே வாய்ப்பேச்சில் ஈடுபடாமல் செயலில் திறமை காட்ட வேண்டும். வலிகாமத்திலிருந்து இடம்பெயர்ந்த மக்கள் மீண்டும் தமது இடங்களுக்குத் திரும்ப அவர்களை தமிழ்க் கட்சியினர் தூண்ட வேண்டும்.

★ தீர்வு யோசனைகளில் பெரிய திருத்தங்களை அரசு செய்யாது. விரைவில் தெரிவுக்குழு முன் அது சமர்ப்பிக்கப்படும்.

★ பௌதீக ரீதியிலான பாதுகாப்பை உறுதிப்படுத்தும் அரசியல் கட்டமைப்பை ஏற்படுத்துவதே அரசின் நோக்கம்.

★ வலிகாமம் பகுதியில்

(8 ஆம் பக்கம் பார்க்க)

ஊழலில் ஈடுபடும்

## அரசுத் தரப்பினருக்கு சந்திரிகா எச்சரிக்கை!

### கடும் நடவடிக்கை எடுக்கப்படுமாம்

கொழும்பு, ஜன. 1

அரசியல் அச்சுறுத்தல், ஒழுங்கீனம், ஊழல் ஆகியவற்றில் ஈடுபட்டதாக காணப்படும் அரசுத்தரப்பு அரசியல்வாதிகள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க எச்சரித்திருக்கின்றார்.

செய்தி நிறுவனம் ஒன்றுக்கு அளித்த பேட்டியிலேயே அவர் இந்த எச்சரிக்கையை விடுத்தார்.

அமைச்சர்கள் உட்பட சில அரசாங்க அரசியல்வாதிகள் அரசியல் காடைத்தனத்தில் ஈடுபடுவதாக தெரிவிக்கப்படும் முறைப்பாடுகள் குறித்து கேட்கப்பட்டபோது இந்த முறைப்பாடுகள்

(8 ஆம் பக்கம் பார்க்க)

மலரும் 1996ஆம் ஆண்டில்

ஈழத் தமிழரின் வாழ்வில்

அமைதி ஏற்பட

உதயனின்

நல்வாழ்த்துக்கள் உரியனவாகுக!

சர்வகட்சி மாநாட்டில் பங்குபற்ற வந்த

## வசந்தராஜாவை பம்பாயில் வைத்து அதிகாரிகள் திருப்பி அனுப்பினர்

லண்டன், ஜன. 1

சென்னையில் ஈழத் தமிழர்களுக்கு ஆதரவாக நடத்தப்பட்டுவரும் அனைத்துக் கட்சி மாநாட்டில் பங்குபற்றுவதற்காக லண்டனிலிருந்து வந்து கொண்டிருந்த — ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத்தின் [illegible] வசந்தராஜாவும் — அவரது மனைவியும் காரணம் ஏதும் காட்டப்படாமல் பம்பாய் விமான நிலையத்தில் வைத்து இந்திய அதிகாரிகளினால் திருப்பி அனுப்பப்பட்டனர்.

லண்டனில் உள்ள இந்தியத்தூதரகத்தில் முறைப்படி விசா பெற்று வந்த போதும் கூட அவர்கள் இருவரும் திருப்பி அனுப்பப்பட்டனர்.

ஈழத் தமிழரின் இனப்பிரச்சினை விவகாரத்தில் —

தென்னிலங்கையில் வாழும் சிங்கள முற்போக்கு சக்திகளும், தமிழ்நாட்டில் பாதிக்கப்பட்டுள்ள மக்களும், தமிழீழ விடுதலைப் போராட்ட சக்திகளும் முக்கோணத் தோழமையுடன் இணைந்து செயற்படவேண்டும் என தான் வலியுறுத்தி வந்ததாகவும் —

இத்தகைய கருத்தை சர்வகட்சி மாநாட்டில் வலியுறுத்தி தாம் பேசவிருந்த வேளையில்

(8 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உடன் சந்திக்கவும்

அத்தியடி; அம்பலவாணர் வீதியில் நைல்ஸ் வீட்டில் வசித்த ஜெயமலரை அதே இடத்தைச் சேர்ந்த ச. ரஞ்சினி அவர்கள் கீழ்க்காணும் முகவரியில் சந்திக்குமாறு கோருகிறார்.

செ. சபாரத்தினம்
பெரிய அரசடி வீதி,
சங்கத்தானை, சாவகச்சேரி.

(39753)

## புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்

இன்று கோலாகலமாக சாவகச்சேரி தனங்களப்பு வீதியில் ஆரம்பிக்கப்படும் யாழ்ப்பாணம் சிறி சுப்பிரமணிய பொத்தகசாலையினருக்கும், எமது வாடிக்கையாளர்களுக்கும் இதயம் கனிந்த புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்.

சோதி அச்சகம்,

கச்சாய் வீதி,
சாவகச்சேரி.
01 - 01 - 1996

(39884)

வாடிக்கையாளர்கள், நண்பர்கள், ஆதரவாளர்கள் அனைவருக்கும் எமது

★ புத்தாண்டு நல்வாழ்த்துக்கள் ★

## லலிதா ஜுவல்லறி

(உரிமையாளர்:- செல்லையா இந்திரசித்து)

## (லலிதா அணிகலப் பூங்கா)

213 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

என்னும் முகவரியில் இயங்கிவந்த எமது ஸ்தாபனம்

**03 - 01 - 1996 முதல்**

239, கண்டி வீதி,
(அரசினர் வைத்தியசாலைக்கு அருகில்)
சாவகச்சேரி

எனும் முகவரியில் இயங்கவுள்ளது என்பதை வாடிக்கையாளப் பெருமக்களுக்கு மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

(39883)

## கண்ணீர் அஞ்சலி

எமது கழக உப தலைவரான
திரு. செ. செல்வராசாவின் தந்தையார்

### சீ. செல்லத்துரை அவர்களது

மறைவுச் செய்தி அறிந்து, ஆழ்ந்த துயரம் அடைகின்றோம். அன்னாரது குடும்பத்துக்கு ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு அவரது ஆன்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

நிர்வாகம்
வளர்மதி முன்னேற்றக் கழகம்,
கொக்குவில் கிழக்கு.

(39758)

## மரண அறிவித்தல்

### சீனியப்பா செல்லத்துரை

கொக்குவில் நந்தாவிலைப் பிறப்பிடமாகக் கொண்ட சீனியாப்பா செல்லத்துரை அவர்கள் கொழும்பில் காலமானார்.

இவர் விஜியலக்சுமியின் அன்புக்கணவரும், அமுதாம்பிகை, செல்வராசா (நாதன் - கபிலா பதிப்பகம், யாழ்.), இளமுருகன், சிவகுமார் (பிரான்ஸ்), கமலாம்பிகை, செல்வகுமார் (கனடா), சகாதேவன், ஸ்ரீனிவாசன் (தற்காலிக ஆசிரியர், சுண்டுக்குளி மகளிர் கல்லூரி), குகதாஸன் (இணைந்த பல்கலைக் கழகக் கல்லூரி, வவுனியா), தணிகேஸ்வரன் [மாணவன், கொக்குவில் இந்துக் கல்லூரி உ/த, 95) ஆகியோரின் அன்புத் தந்தையும், செல்லம்மா (மலேசியா), சரஸ்வதி (மலேசியா) ஆகியோரின் அன்புச் சகோதரனும், ஞானாகர (கனடா), சுவேந்திராதேவி, ஹேமா, நினா, இரவீந்திரன் ஆகியோரின் அன்பு மாமனாரும், சிவகரன், கரிகரன், மயூரிகா, கபிலன், இளங்கோ, ஜனனி, இறைமணன், விஜயா, கௌதமன் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் கொழும்பில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
செ. ஸ்ரீனிவாசன்

மருதங்கேணி வீதி,
(அன்ரன் கடையடி).
புலோலி தெற்கு,
புலோலி.

(39756)

## வீழ்ச்சி

சாவகச்சேரி, ஜன. 1

ஸ்ரீலங்காவுக்கான உல்லாசப் பயணிகள் வருகை கடந்த வருடத்துடன் ஒப்பிடும்போது 14.8 வீதத்தால் வீழ்ச்சி அடைந்துள்ளது.

கடந்த வருட உல்லாசப் பயணிகளின் வருகை 4 லட்சத்து 57 ஆயிரம் ஆகும். இவ்வருடம் அது 3 லட்சத்து 71 ஆயிரமாக குறைந்துள்ளது

(உ-3)

## அனுமார் முகத்துடன் ஆட்டுக்குட்டி

கரணவாய், ஜன. 1

அனுமாரின் முகத்தோற்றத்தை ஒத்த முகத்துடன் ஆட்டுக்குட்டி ஒன்று பிறந்துள்ளது.

இந்த அதிசய ஆட்டுக் குட்டியின் நெற்றியில் ஒரு கண் மட்டும் உள்ளது. ஆடுகளுக்கு வழமையாக உள்ள கண்கள் இல்லை.

கரவெட்டி இராஜ கிராமத்தைச் சேர்ந்த திரு. குலசிங்கம் என்பவரது ஆடு இந்தக் குட்டியை நேற்று முன்தினம் பிற்பகல் 3 மணியளவில் ஈன்றது.

பெரும் எண்ணிக்கையான மக்கள் இந்த அதிசய ஆட்டுக்குட்டியைப் பார்வையிட்டு வருகின்றனர். நேற்று மாலை வரை இந்த ஆட்டுக் குட்டி சுகத்துடன் இருந்தது.

(அ-80)

## அரச சேவையில் உப தபாலக அதிபர்கள்

கொழும்பு, ஜன. 1

நாடெங்கிலும் உள்ள உதவித்தபாலக அதிபர்கள் இன்று முதல் அரசாங்க சேவையில் சேர்க்கப்படுவர்.

இவர்களுக்கான நியமனக் கடிதங்கள் ஜனவரி மாதத்தில் அனுப்பி வைக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது.

உப. தபாலக அதிபர்களை அரச சேவையில் சேர்ப்பதால் அரசுக்கு 6 கோடி 20 லட்சம் ரூபா செலவு ஏற்படுகிறது என்று தபால் மா அதிபர் திருமதி சோமா கொட்டகதெனியா தெரிவித்தார்.

(உ-3)

## கப்பலில் அன்பளிப்பு பொருள்கள்

கொழும்பு, ஜன. 1

யாழ்ப்பாணத்தில் தீவுப் பகுதி உட்பட இராணுவத்தினால் கைப்பற்றப்பட்ட பகுதிகளில் உள்ள மக்களுக்காக 10 ஆயிரம் அன்பளிப்புப் பார்சல்களை ஏற்றிக் கொண்டு ''ஒஷன் கரியர்'' என்ற கப்பல் கொழும்பில் இருந்து நேற்று புறப்பட்டது.

அத்தியாவசிய சேவைகள் பிரதி ஆணையாளர் புத்தி சிறீவர்த்தனா இதனைத் தெரிவித்தார்.

இக்கப்பல், உணவு, அத்தியாவசியப் பொருள்கள் மற்றும் கட்டடப் பொருள்கள் போன்றவற்றை எடுத்துச் செல்வதாகவும் அறிவிக்கப்பட்டது.

(உ-3)

## அதிபர் கூட்டம் நாளை நடைபெறும்

சாவகச்சேரி, ஜன. 1

சாவகச்சேரி மகளிர் கல்லூரியில் இன்று காலை நடைபெறவிருந்த — நல்லூர் கல்விக் கோட்ட அதிபர்களுக்கான — கூட்டம் ஒத்திவைக்கப்பட்டுள்ளது. நாளை காலை 10 மணிக்கு அதே இடத்தில் இக் கூட்டம் நடைபெறும் என்று நல்லூர் கோட்டப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

(உ-3)

## மரண அறிவித்தல்கள்

### இராமநாதன் சோமசுந்தரம்

மாவிட்டபுரத்தைப் பிறப்பிடமாகவும், சங்கத்தானையை தற்போதைய வதிவிடமாகவும் கொண்டிருந்த இராமநாதன் சோமசுந்தரம் (வர்த்தகர்] நேற்றுக் காலமானார்.

அன்னார் மனோன்மணியின் அன்புக் கணவரும், மகேந்திரராஜா [ஆசிரியர், கொழும்பு வெஸ்லிக் கல்லூரி], வத்சலா, இராமநாதன் ஆகியோரின் அன்புத் தந்தையும், சசிகலா (ஆசிரியை, அல்லாரை அரசினர் தமிழ் வித்தியாலயம்), ஜீவதயாள் (கனடா] ஆகியோரின் மாமனாரும், எஸ். ஆர். ஞானசுந்தரம், காலஞ்சென்ற சுப்புலட்சுமி, மற்றும் பாலகிருஷ்ணன் ஆகியோரின் சகோதரனும், சாரங்கியின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (1- 1- 96) காலை 10-00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக கண்ணாடிப் பிட்டி மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

தகவல்;
திருமதி ம. சோமசுந்தரம்
[மனைவி)

தற்போதைய முகவரி:
C/o, நடராசசுந்தரம்,
சங்கத்தானை,
சாவகச்சேரி.

(சி-3009)

### கந்தையா கணேசு

'இராஜபவனம்' இணுவில் கிழக்கு, மஞ்சத்தடியை பிறப்பிடமாகக் கொண்ட கந்தையா கணேசு 31-12-95 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

இவர் காலஞ்சென்ற தங்கச்சி அம்மாவின் அன்புக் கணவரும் முருகையா (கிராம அலுவலர், கோண்டாவில் வட மேற்கு — யா/115. செல்வி இராஜேஸ்வரி (வட இலங்கை மருத்துவ பீட மாணவி) ஆகியோரின் அன்புத் தந்தையும் அருந்தவமலரின் அன்பு மாமனாரும், குழந்தைவேலு, பசுபதி, திருமதி சுப்பிரமணியம் ஆகியோரின் அன்புச் சகோதரரும். காலஞ்சென்ற சுப்பிரமணியம் (ஓய்வு பெற்ற பிரதம புகையிரத காப்பாளர்), சரஸ்வதி ஆகியோரின் மைத்துனரும் கேதனன், சுவேதனன் ஆகியோரின் அன்புப் பேரனாரும், எழிற்செல்வியின் பெரிய தந்தையும் ஆவார்.

அன்னாரின் தகனக்கிரியை 1-1-96 திங்கட்கிழமை காலை 10 மணிக்கு மறவன் புலவு தனிப்பனை மயானத்தில் நடைபெறும்.

தகவல்:
க. முருகையா (மகன்)
(கிராம அலுவலர்)

தற்காலிக முகவரி:-
திருமதி தியாகேஸ்வரி பொன்னம்பலம்,
கல்யாணப் பதிவாளர், கந்தையா வீட்டு ஒழுங்கை,
மறவன் புலவு.

(39754)

### திருமதி பாக்கியம் கிருஷ்ணன்

கோப்பாய் மத்தியைச் சேர்ந்த நாகன் கிருஷ்ணன் அவர்களின் அன்பு மனைவி பாக்கியம் நேற்றுக் காலமானார்.

அன்னார் செல்லமுத்து, மல்லிகாதேவி, தியாகராசா, சின்னராசா, கஜேந்திரராசா (டென்மார்க்), சுந்தரராசா (பிரான்ஸ்), குலேந்திரராசா (ஜேர்மனி), யோகேஸ்வரி, நந்திமலர், விஜயராணி ஆகியோரின் தாயாரும், செல்லத்தம்பி, முருகுப்பிள்ளை, சிவநேசன் (இ.போ.ச.சாரதி), இராசலிங்கம்(பிரான்ஸ்), நித்தியானந்தம் (சாரதி, தனியார்.), றதிதேவி, நாகேஸ்வரி, அழகநந்தினி, மகிழினி ஆகியோரின் மாமியாருமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (1-1-96) பிற்பகல் 2.00 மணியளவில் வேம்பிராய் மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் தயவு செய்து ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
நா. கிருஷ்ணன்
(கணவர்)

தற்போதைய முகவரி:
கமலாசனி ஒழுங்கை,
சரசாலை தெற்கு,
சாவகச்சேரி.

(39755)

### வல்லிபுரம் குணரத்தினம்

வல்லிபுரம் குணரத்தினம் அவர்கள் 31.12.95 காலை சிவபதமடைந்தார்.

அன்னார் தெல்லிப்பழை A. G. A ஒழுங்கையை பிறப்பிடமாகக் கொண்டவரும், தற்போது சரசாலை வடக்கில் (உதயன் காரியாலயத்தில் இருந்து 500 யார்) வசிப்பவரும், பொன்னம்மாவின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற சின்னம்மா, வேலாயுதம் ஆகியோரின் சகோதரரும், குணதாசன் (சிமெந்துக் கூட்டுத்தாபனம்), உதயகுமாரன் (ஜேர்மனி), விஜயகுமார் (சுவிஸ்), அருந்ததி ஆகியோரின் அன்புத் தகப்பனாரும். திருமதி ரஜனி (யூனியன் கல்லூரி ஆசிரியை), திருமதி சுதாமதி (ஜேர்மனி), திருமதி பூங்கொடி (சுவிஸ்), றஞ்சன் ஆகியோரின் அன்பு மாமனும், றோகன், நிர்பன், லாவண்யா, ஆரண்யா, சாரண்யா, சாதனா ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 31.12.95 ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றன.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
கு. குணதாசன்
(மகன்)

சரசாலை வடக்கு.

(39750)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்டி வீதிக்குச் சமாந்தரமாக

# கிளிநொச்சி பழைய ரயில் பாதையில் புதிய வீதி அமைக்கப்படுகின்றது

கிளிநொச்சி, ஜன. 1

கிளிநொச்சி ஊடாகச் செல்லும் பிரதான வீதியான கண்டி வீதிக்கு (யாழ் வீதிக்கு) சமாந்தரமாக புதிய வீதி ஒன்று துரிதமாக அமைக்கப்பட்டு வருகின்றது.

பழைய ரயில் பாதை ஊடாகவே இந்த வீதிஅமைக்கப்படுகின்றது.

புதிய வீதி அமைக்கப்பட்டதும் கிளிநொச்சியில் நிலவும் போக்குவரத்து — சன நெருக்கடி ஓரளவு குறையும் என நம்பப்படுகின்றது.

புதிய பாதையையும் தற்போதைய கண்டி வீதியையும் எதிரெதிர் நிலையிலான ஒரு வழிப்பாதைகளாக மாற்றுவதன் மூலம் வாகனப் போக்குவரத்து நெருக்கடியை மேலும் குறைக்க முடியும் என்று கூறப்படுகின்றது.

பெரும் எண்ணிக்கையான தொழிலாளர்களுடன் புல்டோஸர்களைப் பயன்படுத்தி புதிய வீதியை அமைக்கும் பணி துரிதமாக நடைபெற்று வருகின்றது

புது வீதி அமைக்கப்பட்டதும் வர்த்தக நிலையங்கள் இந்த வீதிக்கும் மாற்றப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது. இதனால் நகரப்பகுதியில் மேலும் சனநெருக்கடி குறையும்

இதேசமயம் —

பரந்தனுக்கும், முல்லைத்தீவுக்கும் இடையிலான வீதி உள்ளூர் மூலப்பொருள்களைப் பயன்படுத்தி திருத்தப்பட்டுவருகிறது.

பொது அமைப்புகளே இதில் ஈடுபடுத்தப்பட்டு வருகின்றன.

(உ-இ-36-76)

## திரட்டிய 10 ஆயிரம் பேரை வைத்து

# புதிய பட்டாலியன் எதையும் அரசு அமைக்க மாட்டாது

கொழும்பு ஜன. 1

இராணுவத்துக்கு மேலும் பந்தாயிரம் பேரை ஸ்ரீலங்கா அரசு திரட்டியுள்ள போதிலும்—

அவர்களைக் கொண்டு புதிய இராணுவ ''பட்டாலியன்கள்'' எதையும் ஆரம்பிக்கும் எண்ணம் இராணுவத் தலைமையகத்துக்கு இல்லை.

சிரேஷ்ட இராணுவ அதிகாரி ஒருவர் இவ்வாறு தகவல் வெளியிட்டதாக கொழும்புப் பத்திரிகை ஒன்று தெரிவித்தது.

விடுதலைப் புலிகளின் தாக்குதல்களினால் உயிரிழந்த படையினர், படுகாயமுற்ற படையினர் ஆகியோரினாலும் —

ஓய்வுபெற்றுச் செல்லும் படையினர் மற்றும் படையை விட்டுச் ஓடும் துருப்பினர் ஆகியோரினாலும்—

ஏற்கனவே இராணுவத்தில் ஏறத்தாழ 10 ஆயிரம் படையினருக்கு வெற்றிடங்கள் உள்ளன.

புதிதாகச் சேர்க்கப்பட்டுள்ள பத்தாயிரம துருப்புகளும் இந்த வெற்றிடங்களை நிரப்ப அனுப்பி வைக்கப்படுவர் என அதிகாரிகள் தெரிவித்ததாக கொழும்புப் பத்திரிகைச் செய்திகள் குறிப்பிட்டன.

களத்தில் யுத்தம் புரியும் பட்டாலியன்களிலேயே பெருமளவு வெற்றிடங்கள் நிலவுவதாக தெரிவிக்கப்பட்டது.

## தொண்ணூற்றாறே வருக! வருக!

தொண்ணூற்றாறே வருக! வருக!
தொழுதுன்னை அழைக்கிறோம் வருக! வருக!
தண்ணளி பெருக்கிட வருக! வருக!
தமிழரின் சுதந்திரம் தந்திட வருக! வருக!

மண்ணிலே மாற்றம் நிகழட்டும்
மக்களின் ஏக்கம் தணியட்டும்
கண்ணிலே சுதந்திரம் தெரியட்டும்
காலமே வரலாறு எழுதட்டும்

உன்னிலே விடிவுகள் பூக்கட்டும்
உரிமையை தமிழர்கள் காணட்டும்
எண்ணிடும் விடுதலை கிடைக்கட்டும்
ஈழத்தில் உன்புகழ் ஓங்கட்டும்.

— காரை எம். பி. அருளானந்தன்-

## சுதந்திரம் தந்திடவே வா!

கூடுகுலைந்து கலைந்த பறவைகள்
வீடு திரும்ப வேண்டும்
பாடமறந்த குயில் குரலெடுத்துப்
பாடும் நிலை வேண்டும்
காடுகளான நிலங்களில் நெற்கதிர்
காய்கனி குலுங்க வேண்டும்
நாடில்லாத அகதியா தமிழன் ?
நாம் தலைநிமிர வேண்டும் !

அந்நியர் ஆதிக்கம் அடிமைத்தளைகள்
அழிந்திடும் நாளெனவே
மண்ணின் விடுதலைக்காக மரணித்த
வரலாறு ஒளிர்ந்திடவே
இன்னும் உன்னடிமை என்றவன்காலில்
வீழ்பவர் தீய்ந்திடவே
தொண்ணூற்றாறு பிறந்திட வேண்டும்
சுதந்திரம் தந்திடவே.

— நெடுந்தீவு லக்ஸ்மன்

## திருப்பத்தை அமைப்பாய்

தொண்ணூற்று ஆறாம் ஆண்டே
தொல்லைகள் எல்லாம் தீர்ந்து
எண்ணம் போல் மக்கள் தங்கள்
இருப்பிடம் ஏகி அங்கு
திண்ணமாய் வாழும் நல்ல
திருப்பத்தை அமைப்பாய் சொந்த
மண்ணிலே வாழ்வு நிலைத்திட
மலர்ந்திடு புதிய ஆண்டே!

— வாசுகி சிவராமலிங்கம்

## இடம்பெயர்ந்த மாவீரர் குடும்பத்துக்கு

வலிகாமம் பகுதியில் இருந்தும், தீவகத்தில் இருந்தும் வடமராட்சி, தென்மராட்சி, வன்னிக்கு இடம் பெயர்ந்துள்ள சகல மாவீரர் குடும்பத்தினரையும் தமது தற்போதைய வதிவிடத்திற்கு அண்மையில் உள்ள அரசியல் துறை கோட்டச் செயலகங்களிலோ, கோட்ட மாவீரர் பணிமனைகளிலோ தொடர்பு கொண்டு தமது தற்போதைய முகவரிகளை அவர்கள் யாழ். மாவட்ட மாவீரர் பணிமனைக்கு தெரிவித்து உதவும்படி கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

## சைவச் சிறுவர் இல்லம்

திருநெல்வேலி சைவ வித்தியா விருத்திச் சங்கத்தின் சைவச்சிறுவர் நிறைவாழ்வு இல்லம கிளிநொச்சி ஜெயந்தி நகரில் உள்ள 'குருகுலம்' வளாகத்தில் இயங்க உள்ளது.

கடந்த ஒக்டோபர் 18 ஆம் திகதியன்று நிறைவாழ்வு இல்லத்தில் தங்கியிருந்த பிள்ளைகள் அனைவரையும், உடனடியாக கிளிநொச்சி குருகுலத்துக்கு வருகை தருமாறு சங்கத் தலைவர் பேராசிரியர் அ சண்முகதாஸ் கேட்டுக் கொண்டுள்ளார். (உ-76)

## விலை வீழ்ச்சி

கிளிநொச்சியில் மரக்கறி, மீன் ஆகிய வற்றின் விலைகள் கடந்த சில நாள்களாக பெருமளவு வீழ்ச்சி கண்டுள்ளது.

(உ-76)

## பயிலுநர் ஆசிரியர் நியமனம்

கிளிநொச்சி மாவட்ட பாடசாலைகளுக்கு நியமனம் வழங்கப்பட்ட 24 தமிழ்மொழி மூல பயிலுனர் ஆசிரியர்களுக்கு அவர்கள் கடமையாற்ற வேண்டிய பாடசாலைகளைக் குறிப்பிட்டு நியமனக்கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளன.

கரைச்சி கல்விக் கோட்டத்திற்கு 5 பேரும், கண்டாவளைக்கு 8 பேரும், பூநகரிக்கு 6 பேரும், பளைக் கல்விக் கோட்டத்திற்கு 5 பேரும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

(உ-76)

## ப. நோ. கூ. ச இயக்குநர்கள் கைது

மட்டக்களப்பு மாவட்டத்தில் வாழைச்சேனை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவர் மற்றும் இயக்குநர் உட்பட பலர் ஸ்ரீலங்கா இராணுவத்தால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

தமது கூட்டுறவுக் களஞ்சிய சாலையிலிருந்து பெருமளவு அரிசி மூடைகளை விடுதலைப் புலிகளுக்கு விற்பனை செய்தனர் என்ற குற்றச்சாட்டின் பேரிலேயே இவர்கள் அனைவரும் கைது செய்யப்பட்டுள்ளதாக பி. பி. சி தெரிவித்தது.

# திருமலையில் கடற்புலிகள் வேவு நடவடிக்கையாம்!

கொழும்பு ஜன. 1

திருகோணமலையில் கடற்படையினரின் நடமாட்டங்களையும் கலங்களின் அசைவையும் விடுதலைப் புலிகள் உன்னிப்பாகக் கவனித்து வருவதாக தங்களுக்கு தகவல் கிடைத்திருக்கின்றது என்று பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

''லங்காதீப'' பத்திரிகைச் செய்தியில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

செம்மலையிலிருந்து திருமலையிலுள்ள சூராக்குடா கடற்கரைப் பகுதிக்கு இரு அதிவேகப் படகுகளில் வரும் சுமார் 15 கடற்புலிகளே இத்தகைய வேவு நடவடிக்கையில் ஈடுபடுவதாகவும் அச்செய்தியில் தெரிவிக்கப்பட்டது. (உ-6)

# புலிகள்என நினைத்து சூடு! படையினர் இருவர் பலி!!

## குச்சவெளியில் சம்பவம்

குச்சவெளி ஏரக்கன்ன இராணுவ முகாமை நோக்கி வந்துகொண்டிருந்த இரு சிப்பாய்கள் மீது படையினர் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் அந்த சிப்பாய்கள் இருவரும் அந்த இடத்திலேயே உயிரிழந்தனர்.

இந்தச் சம்பவம் அண்மையில் இடம்பெற்றதாக அறிவிக்கப்படுகின்றது.

இரவு நேரம் இந்த இருவரையும் கண்டதும் இராணுவ முகாமிலிருந்தோர் புலிகள் முகாமை நோக்கி வருவதாகச் சந்தேகித்து துப்பாக்கிப் பிரயோகம் செய்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

சமன் மில்ரோய், எம்.ஆர். சுமணதேவ ஆகிய இரு சிப்பாய்களுமே கொல்லப்பட்டவர்களாவர், (உ-3)

## பருத்தித்துறை, சாவகச்சேரியிலும்

# பொலீஸ் நிலையங்கள் திறக்கப்படுமாம்

## பொலிஸ்மா அதிபர் கூறுகிறார்

கொழும்பு, ஜன. 1

சுன்னாகம், மானிப்பாய், வட்டுக்கோட்டை நாகதீபம், வேலணை ஆகிய இடங்களில் புதிய பொலீஸ் நிலையங்களைத் திறப்பதற்கான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. கண்ணிவெடிகள் அகற்றப்பட்ட பின்னர் பருத்தித்துறை, சாவகச்சேரி. பளை ஆகிய இடங்களிலும் பொலீஸ் நிலையங்கள் திறக்கப்படும்.

வியாழனன்று யாழ்ப்பாணத்தில் பிரதானபொலீஸ் தலைமை அலுவலகம், பிரதிப் பொலீஸ்மா அதிபர் அலுவலகம். கோப்பாய் பொலீஸ் நிலையம் ஆகியவற்றைத் திறந்து வைத்துவிட்டு கொழும்பு திரும்பிய பொலீஸ்மா அதிபர் ராஜகுரு மேற்கண்டவாறு செய்தியாளர்களிடம் கூறியதாக இலங்கை வானொலி தெரிவித்தது.

பொலீஸ் நிலையங்கள் திறந்துவைக்கப்பட்ட வைபவத்தில் பௌத்த பிக்குகளும் யாழ். நகரில் தங்கி உள்ள 400 பொது மக்களும் கலந்து கொண்டனர் என்றும்—

தேசியக் கொடியை அசைத்து அவர்கள் தமது மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொண்டனர் என்றும் —

சென். பற்றிக்ஸ் கல்லூரி, பரிசுத்த கன்னியர் மடம், ஜோசப் தேவாலயம் ஆகியவற்றில் தங்கி இருந்தவர்களே இவர்கள் என்றும் பொலீஸ் மா அதிபர் தெரிவித்தார். (இ)

## சித்த மருத்துவ நூல் நிலையம்

சாவகச்சேரி, ஜன. 1

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக, சித்த மருத்துவத்துறை நூலகம் கடந்த 19ஆம் திகதி தொடக்கம் இயங்குகின்றது என துறைத்தலைவர் அறிவித்துள்ளார்.

## புதுச்சதி புனரமைப்பா?

வலிகாம மண்ணில் வழிந்தோடிய உதிரக்கறை
இன்னும் அங்கே மறைந்திடவில்லை.
ஆழம்பட்ட புண்ணின் சதைப்பரப்பு அதன்
மேல் மட்டம் வரைகூட நிரம்பிடவில்லை
பிச்சுப்பேய்களின் எறிகணை விசையில்
அங்கவீனமானோர் தொகை எண்ணில் அடங்கவில்லை
சிந்தித்த விளைவால் செயலிழந்த மூளையோடு
பயித்தியக்காரன் என்ற புதுப்பட்டமேற்று
தன்னிலை இழந்து உலாவரும் சிலமனிதர்
மனிதராயில்லை

தாங்கமுடியாத பாரங்களை தாங்கித் தாங்கி
உதட்டளவில் விம்மி கண்களில் நீர் சிந்தி
சாவு விழிம்பின் நூலிலாடுவோர் தொகை
கூடியதே தவிர குறைந்தளவில் இல்லை
இத்தனைக்கும் காரணமான சுடலை ராணியே!
இன்னும் எத்தனை துயர்களை தர மீள்குடியேற்றம்
அரண் அமைப்பையே தகர்த்த பேயே
உன்னால் இனி நமக்கொரு புனரமைப்பா?

புதுச்சதி வலை பின்னிய பித்தராணியே
அதன் புனைபெயர்தான் புனரமைப்பா?
உன்வலையில் இனி எம் இனம் வீழாது
உன் அழைப்பு மீதியானோருக்கு சாவுமணியா?
குழை நீட்டிக் கழுத்தறுக்கும் கூட்டமே
உன் குழை நமக்கு தேவையானதில்லை
நீ எப்படியாவது குலைத்துக் கொண்டிரு
தமிழனோ வலிகாமம் இப்போது வரமாட்டான்
இனியும் எம்இனம் ஏமாறுவதாயில்லை

க. இ. சாந்தகுமார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலிகளின் தாக்குதல்களை சமாளிக்க கடற்படை பெரும் அளவில் விஸ்தரிப்பு

வடக்கு யுத்தத்துக்கு கடல் வழி ஊடாக விநியோகப் பாதை முக்கியமானது என அரசு கருதுவதால் அதனைத் தக்க வைப்பதற்காகவும் —

கடற்கரும் புலிகளின் தாக்குதல் ஆபத்து அதிகரித்திருப்பதால் அதனைச் சமாளிப்பதற்காகவும்—

ஸ்ரீலங்கா கடற்படையை என்றுமில்லாதவாறு பெரும் எடுப்பில் விரிவுபடுத்த அரசு முடிவு செய்திருக்கின்றது.

கொழும்புப் பத்திரிகை ஒன்று இத்தகவலை வெளியிட்டிருக்கின்றது.

இதன்படி—

கடற்படைக்கு மேலதிகமாக ஆட்களைச் சேர்த்துக் கொள்வதற்கும் —

அதேவேளை நவீன கடற்படைக் கலங்களைக் கொள்வனவு செய்வதற்கும்—

அரசு ''பச்சைக் கொடி'' காட்டியிருப்பதாக அதிகபூர்வ பாதுகாப்பு அதிகாரி ஒருவர் குறிப்பிட்டார் என்று அப்பத்திரிகை தெரிவித்தது.

1991 இற்குப் பின் கடற்படையில் ஏற்பட்ட வெற்றிடங்களுக்கு மட்டுமே ஆட்கள் சேர்த்துக் கொள்ளப்பட்டனர் என்றும் —

கடற்படையின் நிரந்தரத் துருப்புகளின் எண்ணிக்கையையோ, அல்லது கடற்படை தொண்டர் பிரிவுத் துருப்புக்களின் எண்ணிக்கையையோ அதிகரிக்க நடவடிக்கை ஏதும் எடுக்கப்படவில்லை என்றும்—

அந்த அதிகாரி மேலும் தெரிவித்தார்.

வழக்கமாக நூறு அதிகாரிகளையும் ஆயிரம் ஏனைய தரத்தினரையும் கடற்படை வருடம் தோறும் தெரிவு சய்வது வழக்கம்.

புதிய திட்டத்தின்படி —

ஒரு மட்டத்தை அடையும் வரைஆள்திரட்டல்தொடரும் என்று கடற்படை அதிகாரி ஒருவர் தெரிவித்தார். ஆனால் புதிதாகச் சேர்க்கப்படும் துருப்புகளின் எண்ணிக்கையை அவர் வெளியிடவில்லை.

கடற்படைத் தொண்டர் பிரிவும் இரண்டு மடங்காக உயர்த்தப்படும் என்றும் அவர் சொன்னார்.

கடற் புலிகளின் தாக்குதல் ஆபத்து அதிகரித்திருக்கும் இவ்வேளையில் கடல்வழி விநியோகப் பாதையை தக்க வைத்திருப்பது மிகமிக அவசியமானது என்பதை அரசு உணர்ந்திருப்பதாக பாதுகாப்பு ஆய்வாளர்கள் குறிப்பிட்டனர். (உ)


## சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

EY 18 றொபின் நீர் இறைக்கும் யந்திரம், சிறிய 12 அங்., 20 அங்., 24 அங். லுமாலா சைக்கிள்கள், வீட்டுத் தளபாடங்கள் விற்பனைக்குண்டு. ஆதவன் சைக்கிள்ஸ், நெல்லியடி. (39752)

### இட மாற்றம்

44, சட்டநாதர் வீதி நல்லூர், யாழ்ப்பாணத்தில் இயங்கிவந்த ஆங்கில வைத்தியசாலை இடைக்குறிச்சியில் (வரணி ஆஸ்பத்திரி அருகில்) இயங்கி வருகின்றதென்பதை வாடிக்கையாளர்களுக்கு அறியத் தருகிறோம். டாக்டர் திருமதி ப. கனகசுந்தரம் (மாம்பழம்). (39868)

### சுடரொளி

சுடரொளி இந்து நாட்காட்டி (திருக்கணித பஞ்சாங்க மாதக் கலண்டர்) விலை 70/- மட்டுமே வெளியீடு கல்வயல் இந்து இளைஞர் மன்றம். தொடர்பு: திருக்கணித நிலையம், மட்டுவில். (39585)

### புலமைப்பரிசில் - 95

3 – 12 – 95 அரசாங்கத்தினால் நடாத்தப்பட்ட ஆண்டு 5 புலமைப்பரிசில் பரீட்சை வினாத்தாள்கள் எல்லா புத்தகசாலைகளிலும் பெற்றுக் கொள்ளலாம். 95, 96 பிரிவுகளுக்கான மாதிரி பயிற்சி வினாத்தாள்கள் 15 - 1 - 96 முதல் பெறலாம். வெளியீடு: BOND, யாழ்ப்பாணம். (39742)

### SPOKEN ENGLISH

Spoken English with Grammar கற்பிக்கப்படும். V. N. Kandasamy A. I. B. Part I (London), Inter (London), Dip - in - English கைதடிச் சந்திக்கு அண்மையில் உள்ள ஒழுங்கையில் Dr. சபாநாதன் வீட்டிற்குச் சமீபமாக, கைதடி. (39751)

### அடையாள அட்டை

அடையாள அட்டை கவரிடவும், போட்டோ பிரதிகளைப் பெறவும் சிறந்த இடம்: கிளீன்கட், நீதிமன்று அருகாமை, சாவகச்சேரி. (39857)

### சோதிடம்

96 ஆம் ஆண்டு உங்களுக்கு எப்படி? விற்பனையாகிறது. இராசிகளுக்கும், பிறந்த திகதிகளுக்கும் பலாபலன்கள் சோதிடர் V. A. சிவராசா. விற்பனை முகவர்: 'பரம்ஸ்'- பஸ் நிலையம், சாவகஸ்சேரி. (39880)

## 31-ம் நாள் நினைவஞ்சலி

### வெற்றிவேலு தேவதாசன்

(தொல்புரத்தைச் சேர்ந்த இளைப்பாறிய இலிகிதர்)

தோற்றம்: 20 - 06 - 1942 மறைவு: 02 - 12 - 1995

எங்களது உள்ளத் திருக்கின்ற தேவதாசா!
உங்கள் பிரிவால் உள்ளம் வருந்துகிறோம்
அன்புத் துணைவி அரியதவமணியை
நன் மக்களான கோணேச குமாருடனே
ஹம்சா நல் ரேவதியை கலங்க விட்டுச் சென்றாயே
இலண்டனிலே உள்ள கணக்காளர் கோணேசை
என்று நான் காண்பன் என ஏங்கித் தவித்தாயே
இன்றுன்னைக் காணாமல் ஏங்க வைத்துப் - போயினையே

மருந்தாளரான எம் மனதில் நிறைந்தவனே
விருந்தாளி யானாயோ மேலுலக வானவர்க்கு
ஐயா! நீ ஈசனடி அடைந்து நற் சாந்தி பெற
கைதொழுது ஈசன் கருணைதனை வேண்டுகிறோம்.

மருந்தாளர்கள்,
யாழ்/போதனா வைத்தியசாலை

மந்திகை
01 – 02 – 1996 (39728)

## 5 ஆம் ஆண்டு நினைவு தினமும் ஆண்டுத் திவசமும்

மழலையாய்: 1974—07—05 மண்ணுக்காய்: 1990—12—28

### வீரவேங்கை பாலா

இராசையா தவநேசன்

திதி: 1-1-1996 சுவர்க்கவாயில் ஏகாதசி

மண்ணுக்காக உயிர் நீத்த பாலா எம்
உள்ளத்தில் உயிர் வாழும் மாவீரா
ஆண்டுகள் ஐந்து ஆனதையா! நீ மறைந்து இன்னும்
எண்ணூறு ஆண்டுகள் வந்தாலும் என்ன
மறையுமா! உன் அழகுத் தோற்றம்?
மாறுமா உன் புலியின் சீற்றம்.
உன்னை நினைத்து நித்தம் உருகிநிற்கும்;

குடும்பத்தினர்,
அச்சுவேலி தெற்கு,
அச்சுவேலி.

தற்போதைய முகவரி:
சரசாலை மத்தி,
சாவகச்சேரி.. (39746)

## சஞ்சீவி

வர்ணப் பூச்சுக்கள், கட்டடப் பொருள்கள் வாணிபம்

எமது ஸ்தாபனம் இன்று 01- 01- 96 திங்கட்கிழமை கீழ் வரும் முகவரியில் ஆரம்பிக்கப்படுகின்றது என்பதை வாடிக்கையாளர்களுக்கு அறியத் தருகின்றேன்.

இல. 7, பஸ்நிலையம்,
சாவகச்சேரி.

உரிமையாளர்:- சி. தியாகராசா

(39876)

## எமது புதுவருட வாழ்த்துகள்

வீடியோ படம் பிடித்திடவும் மணப்பந்தல் அமைத்திடவும் நாடுங்கள்.

### வீடியோ கலாமினி

அச்சுவேலி.

கிளை:- டச்றோட், சாவகச்சேரி.

(39727)

## நல்லூர் ப.நோ.கூ. சங்கம்

எமது அங்கத்தவர்களுக்கும், வாடிக்கையாளர்களுக்கும் மனமுவந்த புத்தாண்டு வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

பாவனையாளரின் வசதி கருதி 3 ஆம் கட்ட நிவாரணம் பின்வரும் எமது கிளைகளில் 29—12—1995 முதல் விநியோகிக்கப்பட்டு வருகின்றது.

| கிளை இல. | | கிளை இல. | |
|---|---|---|---|
| 1. | கைதடிச் சந்தி. | 8. | நெல்லியடி, புதுத்தோட்ட சந்தி. (நெல்லியடி- கொடிகாமம் வீதி) |
| 2. | கேரதீவு, நாவற்குழி. | 9. | ஆசைப்பிள்ளையேற்றம், கண்டி வீதி, மிருசுவில். |
| 3. | கண்டி வீதி, சாவகச்சேரி. | 10. | கேரதீவு, தனங்கிளப்பு. |
| 4. | வேரக்கேணி பிள்ளையார் கோவிலடி, மட்டுவில். | 11. | தென்மட்டுவில் கதிரொளி. சனசமூக நிலையம், நுணாவில். |
| 5. | புகையிரத நிலையம் முன்பாக, முருகன் கோயிலடி, சங்கத்தானை. | 12. | கச்சாய் வீதி, சாவகச்சேரி. |
| 6. | மாவடிப் பிள்ளையார் கோவிலடி, மீசாலை. | 13. | கோயிலாக்கண்டி. |
| 7. | புத்தூர் வீதி, மட்டுவில், சரசாலை. | 14. | கல்வயல், சாவகச்சேரி. |
| | | 15. | புடைவை, காகிதாதி, வாடகைக் கதிரைப் பகுதி. (கைதடி காவல்துறை நிலையம் அருகாமை) |

தலைமைக் காரியாலயம்:-

இரட்சண்யசேனை ஆலய இல்லம், கண்டி வீதி, கைதடி.

கிராமிய வங்கிகள் தற்காலிகமாக கிளை இல. 3 சாவகச்சேரியில் செயற்படுகின்றது.

✶ கீழ்குறிப்பிட்ட கிளைகளில் இடம்பெயர்ந்தோருக்கான 29பி, 30ஏ, 30பி இலக்க நிவாரணப் புள்ளிகளுக்கான பொருள் விநியோகமும் நடைபெற்று வருகின்றது.

கிளைகள் இல:- 1, 2, 4, 5, 8, 9.

தலைவர் பொது முகாமையாளர்

(சி/3008)

## 11-ம் ஆண்டு நினைவஞ்சலி

ஏபிரகாம் மாணிக்கம் சாராம்மா மாணிக்கம்

(6/1, மாட்டின் வீதி, யாழ்ப்பாணம்)





மறைவு:
01 — 01 — 85 24 — 04 — 87

அறிவுக்கும் அன்புக்கும் இலக்கணமாய் ஆற்றுப்படுத்தினீர்கள். மலர்ப்பாதங்களை முத்தமிட்டு காலமெல்லாம் கணமும் நினைத்திருக்க புத்தாண்டில் ஆசி வேண்டுகிறோம்.

பிள்ளைகள்.
(M. J. ராஜரெட்ணம்)

(39713)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். மக்களை தூண்டில் போட்டு ராணுவச் சிறைக்குள்ளிட முயற்சி

1995ஆம் ஆண்டு நேற்றுடன் கடந்து போயிற்று. அந்த ஆண்டின் முதல் நான்கு மாதங்களும் சந்திரிகா போட்ட சமாதானம் என்ற பொய் வேடத்தின் பார்வைக்கு ஆட்பட்டு வெறும் நம்பிக்கைகளுடனும் எதிர்பார்ப்புகளுடனும் கரைந்து போயிற்று.

சமாதானத்தைக் கொண்டு வருவதிலும், தமிழர் பிரச்சினைக்கு நியாயமான தீர்வு ஒன்றை வகுத்து நடைமுறைப்படுத்துவதிலும் பெரும் அக்கறையுள்ளவராகக் காட்டிக் கொண்ட அவர், விடுதலைப் புலிகளுடன் நடத்திய பேச்சுவார்த்தைகளில் சிறுபிள்ளைத்தனமாக, விளையாட்டாகவே நடந்து கொண்டார்.

தமக்குச் சமாதானத்தில் ஆர்வமும் அக்கறையும் உண்டு என்று வெளி உலகத்துக்குக் காட்டிக் கொள்வதற்காக சந்திரிகா இயக்கி, நடித்த நாடகமே அந்தப் பேச்சு வார்த்தை.

இராணுவ நலன்களை முன்னிறுத்தியும், தமது அரசியல் தீர்வு யோசனையை வெளியிடாமலும், தமிழ் மக்களின் அன்றாடப் பிரச்சினைகளை களைவதில் நாட்டம் கொள்ளாமலும் அவர் கையாண்ட அணுகுமுறையால் பேச்சுவார்த்தைகளும், போர் நிறுத்தமும் (சரியாகச் சொல்வதானால் மோதல் நிறுத்தமும்) முறிந்து போயின.

ஜனவரி தொடக்கம் ஏப்ரல் வரையும் பல அரசியல் ''திருக்கூத்துக்களை'' நடத்தி, தன்னை ஒரு சமாதானத் தேவதையாகக் காட்டிக் கொண்ட சந்திரிகா, மே மாதத்தில் தனது பொய் வேடத்தைக் களைந்து உண்மையான — இராணுவ அடக்குமுறைக்காரி — தோற்றத்தைக் காண்பித்தார்.

போரினூடாகச் சமாதானம் என்ற கொடூரமான கோட்பாட்டை முன்வைத்து தமிழர்கள் மீதான இராணுவ வெறியாட்டத்தைக் கட்டவிழ்த்து விட்டார்.

### சிங்கள ஆதிபத்திய இலக்கு

இராணுவ அடக்கு முறையின் ஊடாக தமிழர்கள் மீது சிங்கள ஆதிபத்தியத்தைச் செலுத்துவதே சந்திரிகாவின் முழு நோக்கமும் இலட்சியமும் ஆகும். கழிந்த வருடத்தின் பின் எட்டு மாதங்களிலும் அவர் எடுத்த ஒவ்வொரு நடவடிக்கையும் அதனையே புலப்படுத்தியது.

நேற்றோடு நீங்கிச் சென்றது.

★ ★ ★

1995 ஆம் ஆண்டில் தமக்கு ஏற்பட்ட அவலங்கள், துன்பங்கள் இன்று பிறக்கும் 1996 ஆம் வருடத்திலாவது நீங்காதா, குறையாதா, சொந்த வீடு திரும்ப முடியாதா, நிம்மதியாக வாழமுடியாதா என்று தமிழ் மக்கள் பலதையும் பத்தையும் நினைப்பது இயல்பு

இந்த உளவியலை அறிந்து தான் சந்திரிகா வலிகாமம் மக்களை அங்கு திரும்ப அழைத்து மீளக் குடியேற்றுவதற்காகப் பல தூண்டில்களைப் போடுகிறார்! அதற்கேற்ற விதத்தில் பிரசார இயக்கம் ஒன்றையும் நடத்துகிறார்!

வலிகாமத்தில் — யாழ்ப்பாண நகரம் உட்பட — மூவாயிரம் பொதுமக்களே வாழ்வதாக சந்திரிகா தனது வாயாலேயே கூறினார்.

அவர்களை வைத்துக்கொண்டு. அவர்கள் நலன் கருதியெனக் கூறிக்கொண்டு, பொலீஸ் நிலையங்கள் திறக்கப்படுகின்றன. புனரமைப்பு வேலைகளை மதிப்பீடு செய்வதற்கு 100 பேர் கொண்ட அதிகாரிகள் குழு யாழ்ப்பாணம் சென்றுள்ளது. யாழ் ஆஸ்பத்திரியை இயக்கப் போகிறோம். வைத்தியர்கள், ஊழியர்களை விமானத்தில் கொண்டு வரவும் தயாராக உள்ளோம் என்றவாறு எல்லாம் பிரசாரம் நடக்கிறது.

இந்தப் பிரசாரங்களில் தமிழ் மக்கள் எடுபடப்போவதில்லை.

எப்பாடுபட்டும் வலிகாமம் மக்களை இழுத்து எடுத்து யாழ்ப்பாணத்தில் ''சிவில் நிர்வாகத்தை'' நடத்த வேண்டும் என்பதே சந்திரிகாவின் இப்போதைய அவசரம்.

அந்தச் ''சிவில் நிர்வாகம்'' தமிழர்களை இராணுவத்திடம் சிறை வைக்கும் செயற்பாடாகவே இருக்கும். அதன் பொருட்டே ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரல் ஜே. பி. பாகொட யாழ்ப்பாணத்தின் மேலதிக அரச அதிபராக நியமிக்கப்பட்டிருக்கிறார்.

★ ★ ★

இராணுவம் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றிவிட்ட போதிலும், தொடர்ந்தும் விடுதலைப் புலிகளின் தாக்குதல்களுக்கு முகம் வேண்டியுள்ளது. இதனைப் பாதுகாப்பு

## தோல்வியை சரிக்கட்ட பகீரதப்பிரயத்தனம்

தமிழ் மக்களை விடுதலைப் புலிகளிடம் இருந்து விடுவிப்பதாகக் கூறிக்கொண்டு யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றும் முக்கிய இலக்குடன் 'டிரகன் பயர்'' முன்னேறிப் பாய்தல், இடி முழக்கம், கை குலுக்கல், சூரியப் பிரகாசம் என்று பல இராணுவ நடவடிக்கைகளை அரசு ஈவிரக்கமின்றி நடத்தியது.

குடிசனம் செறிந்த யாழ்ப்பாணக் குடாநாட்டில் விமானத் தாக்குதல்களும், எறிகணைத் தாக்குதல்களும், கனரக வாகனங்கள் நவீன ஆயுதங்கள் கொண்டு நடத்தப்படும் இராணுவ நடவடிக்கைகளும் பொதுமக்களுக்கே பெருமளவிலான உயிரழிவையும், உடைமை அழிவையும், சேதத்தையும் உண்டாக்கும் என்பது நன்றாகத் தெரிந்த விடயம்.

ஆனால் பத்தாயிரம் வரையான இராணுவத்தினரைப் பலிகொடுத்தேனும் யாழ்ப்பாணக் குடாநாட்டைக் குறிப்பாக யாழ். நகரத்தைக் கைப்பற்றுவதென்று அமைச்சர் அனுருத்த ரத்வத்த திட்டமிட்டார். அதனை ஜனாதிபதி சந்திரிகா அங்கீகரித்தார்.

சென்ற வருடத்தின் பின்னரைப்பகுதி தமிழர்களுக்குப் பேரழிவையும், பெரும் சோதனைகளையும் தந்த அவல மாதங்களாகவே கழிந்தன. அந்த மாதங்களில், குறிப்பிட்டுச் சொல்வதானால் ஸ்ரீலங்கா இராணுவத்தின் அசுரத்தனம், அரக்கத்தனம் அளவுக்கு அதிகமாகக் கட்டுமீறிச் சென்றது.

அதனால் சிறுவர்கள், மாணவர்கள் உட்பட பெரும் எண்ணிக்கையான அப்பாவித் தமிழ் மக்கள் கொலையுண்டனர். கோடிக்கணக்கான ரூபா பெறுமதியான சொத்துகள், உடைமைகள் நாசமாக்கப்பட்டன. லட்சக்கணக்கில் தமிழர்கள் தமது சொந்தக் கிராமங்களை, வீடு வாசல்களை விட்டு, உடைமைகளை இழந்து, இடம் பெயர்ந்து அவலமுற நேர்ந்தது.

### வரலாற்று நிகழ்வு

வலிகாமத்தைச் சேர்ந்த ஐந்தரை லட்சம் மக்கள் தமது உயிர்களைக் காப்பாற்றும் பொருட்டு இரண்டொரு நாள்களில் ஒட்டு மொத்தமாக வெளியேறி இடம் பெயர்ந்தமை வரலாற்றில் இதுவரை இடம்பெறாத நிகழ்வாகும்.

ஜூலையில் வலிகாமம் மேற்கில் நடந்த முன்னேறிப் பாய்தல் இராணுவ நடவடிக்கையின் பின்னர் குடாநாட்டில் இராணுவத்தின் நெட்டூரம் ஒக்டோபர் வரை நீடித்தது.

அதிலிருந்து தப்பும் பொருட்டு ஒக்டோபர் இறுதியில்— 30, 31 ஆம் திகதிகளில் — வலிகாமத்தைச் சேர்ந்த மக்கள் தென்மராட்சி, வடமராட்சி, வன்னிப் பகுதிகளுக்கு இடம் பெயர்ந்தனர்.

இதனால் ஸ்ரீலங்கா இராணுவம் யாழ்ப்பாண நகரையும் வலிகாமத்தின் ஏனைய பகுதிகளையும் கைப்பற்றிய போதிலும் சந்திரிகா அரசுக்குப் பெரும் அரசியல் தோல்வியாக முடிந்தது!

இத்தகைய ஒரு சூழ்நிலையில் வலிகாமம் மக்களுக்குச் சலுகைகளைக் காட்டி, ஆசை வார்த்தை பேசி, நெருக்குதல்களைக் கொடுத்து என்று, பல தந்திரோபாயங்களைப் புரிந்து தூண்டில் போட்டு அவர்களை அங்கே இழுத்து எடுத்து சிவில் நிர்வாகம் என்ற பெயரில் இராணுவ அடக்குமுறைக்கு ஆட்படுத்தப் பகீரதப் பிரயத்தனம் செய்கிறார் —ஒற்றைக் காலில் நிற்கிறார் — சதிர் ஆடுகிறார் — சந்திரிகா.

1995 ஆம் ஆண்டு — அதன் பின்னரைப்பகுதி — தமிழ் மக்களுக்குச் சொல்லொணா அழிவையும், நாசத்தையும், துயரத்தையும், துன்பத்தையும், உடல் உள தாக்கங்களையும் தந்த, உபத்திரவம் விளைவித்த கொடுமை ஆண்டாக அமைச்சு வட்டாரங்களே ஒப்புக் கொண்டுள்ளன. அடிக்கடி வானொலியிலும் கூறிக்கொள்ளப்படுகிறது.

பலாலி இராணுவத் தளத்திற்குள்ளேயே ஊடுருவிப் புலிகள் தாக்குதல்கள் நடத்துகின்றார்கள்!

யாழ்ப்பாணத்தில் பழுத்துத் தொங்கும் பெருவாரியான மாம்பழங்களை பறிக்க முடியாத அளவுக்குப் விடுதலைப் புலிகள் பொறி வெடிகளையும், மிதி வெடிகளையும் புதைத்திருப்பதாக இராணுவ அதிகாரி ஒருவர் கூறியிருக்கிறார்.

யாழ். வீதிகளைக் கொல்லும் களமாகப் புலிகள் மாற்றியிருந்தார்கள்; இராணுவம் கடும் எதிர்ப்பை எதிர் கொண்டது — என்று இராணுவத் தளபதி லெப். ஜெனரல் ஜெரி டி சில்வா கூறியது நிகழ் காலத்துக்கும் பொருந்தும். அதே விலையே இப்போதும் அங்கு விடிகிறது நீடிக்கிறது உண்மை.

**சதுரங்கம்** — சாணன்

இது ஒரு புறமிருக்க யாழ்ப்பாணத்தில் — வலிகாமத்தில் — உள்ள படையினருக்கான விநியோகம் பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கிறது. கொழும்புத் தகவல்கள் அதனை ஊர்ஜிதப் படுத்துகின்றன.

இரணுவத்துக்கான கடல்வழி, வான்வழி விநியோகம் பாதிக்கப்பட்டிருப்பதை நீக்கி. அதனைச் உறுதிப்படுத்துவதற்காக, சீராக்குவதற்காக யாழ். நகருக்கு தரைவழிப் பாதை ஒன்றை திறக்க அரசு திட்டபாட்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

மன்னாருக்கு மேற்கே சங்குப்பிட்டியூடாக இந்தப் பாதையைத் திறப்பதற்காக, இராணுவ நடவடிக்கையைத் தொடங்குவதே அந்தத் திட்டமாக இருக்கலாம்.

யாழ்ப்பாணத்தில் இராணுவத்தை நிரந்தரமாகவும் செறிவாகவும் நிலைகொள்ள வைத்து அங்கு இராணுவ ஆட்சியைஉருவாக்குவதில் அரசு எவ்வளவு விடாப் பிடியாகச் செற்படுகிறது என்பதனை இதிலிருந்து புரிந்து கொள்ளகலாம்,

அரசியல் தீர்வுத் திட்டம் என்பதெல்லாம் வெறும் ஏமாற்றும் பம்மாத்துமே! அது தெரிவுக் குழுவிடம் சமர்ப்பிக்கப்பட்டு நாடாளுமன்றம் வருவதற்கிடையில் 1996 ஆம் ஆண்டு கரைந்து போய்விடும். ★

## வவுனியா பயணிகள் முகாம் இராணுவப் பொறுப்பில்!

வடக்கில் இருந்து செல்லும் பயணிகளை தங்க வைக்கும் வகையில் வவுனியாவில் அமைக்கப்பட்டுள்ள தற்காலிக முகாம் தற்போது இராணுவத்தினரால் பொறுப்பேற்கப்பட்டுள்ளது

இதுவரை காலமும் இந்த முகாம் பொலீஸ் மற்றும் வவுனியா செயலகம் ஆகியவற்றின் பொறுப்பில் இருந்து வந்தது.

கடந்த வியாழக் கிழமை முதல் இராணுவம் முகாமை பொறுப்பேற்றுள்ளதாவகும்—

அவர்களே பயணிகள் வெளியே செல்வதற்கான ''பாஸ்'' வழங்குவதற்கு பொறுப்பாக இருப்பதாகவும் — தெரிவிக்கப்பட்டது.

கடந்த வியாழக் கிழமை வரை 357 பேர் முகாமில் அனுமதிக்கப்பட்டனர் என்றும்— அதில் 43 பேர் மட்டும் கொழும்பு செல்ல அனுமதிக்கப்பட்டதாகவும் — தெரிய வந்தது.

### கொடும்பாவி நாளை எரிப்பு

சாவகச்சேரி, ஜன. 1

ஈழத் தமிழரின் போராட்டத்துக்கு ஆதரவாக திருச்சியில் தனக்குத் தானே தீமூட்டி எரித்து தற்கொலை செய்து கொண்ட இளைஞனுக்கு அஞ்சலி செலுத்தும் நிகழ்வு நாளை மாலை 5 மணிக்கு எழுதுமட்டுவாள் சந்தியில் நடைபெறவிருக்கிறது.

இந்நிகழ்வின் போது— ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா, பிரதி பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்தை, இந்தியப் பிரதமர் நரசிம்மராவ், தமிழக முதல்வர் ஜெயலலிதா ஆகியோரின் கொடும்பாவிகள் பல்வேறு வீதி வழியாக எடுத்துவரப்பட்டு, எழுதுமட்டுவாள் சந்தியில் வைத்து எரிக்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது

(உ)

### புகைப்பட கண்காட்சி

கிளிநொச்சி, ஜன. 1

கிளிநொச்சி மத்திய கல்லூரி விளையாட்டுத் திடலில் தமிழீழவிடுதலைப்போராட்ட வரலாற்றை சித்திரிக்கும் புகைப்பட கண்காட்சி ஒன்று விசேட பந்தலில் நடைபெற்று வருகின்றது. ஏராளமான பொதுமக்கள் தினமும் இதனை பார்வையிட்டு வருகின்றனர். (உ-76)

### இரு தரப்பிலும் ஆட்பலம் குறைவாம்

கொழும்பு, ஜன. 1

''வடக்கிலும் கிழக்கிலும் ஏககாலத்தில் போரிடக் கூடிய வளம் அரசிடமோ, விடுதலைப் புலிகளிடமோ இல்லை.''

இப்படி பி. பி. ஸி. செய்தியாளர் அமல் ஜயசிங்க கூறினார்.

இருதரப்பிலும் உள்ள ஆட்பலக் குறைவே இதற்கு காரணமாகும் என்றும் அவர் சொன்னார்.

'சூரியப்பிரகாசம்' நடவடிக்கையில் ஈடுபட்ட படையினரை கிழக்கே அனுப்ப அரசிடம் ஆலோசனை உள்ளதாகவும் —

இதனை எவ்வளவு விரைவாக செய்ய இயலும் என்பதே தற்போதுள்ள கேள்வி என்றும் — அவர் கூறினார்.

(இ-3-6)

### மீன் பிடிக்க தடை விதிப்பு

கொழும்பு, ஜன. 1

அம்பாறையில் உள்ள சேனநாயக்கா நீர்த் தேக்கத்தில் மீன் பிடித்தல் பாதுகாப்புக் காரணங்களை முன்னிட்டு தடை செய்யப்பட்டிருப்பதாக அறிவிக்கப்படுகின்றது.

இந்த நீர்த்தேக்கம் தகர்க்கப்படலாம் என அஞ்சும் அரசாங்கம் அதைத் தடுக்கும் பாதுகாப்பு முன்னேற்பாடாக இந்தத் தடை உத்தரவைப் பிறப்பித்துள்ளது என்று கூறப்படுகின்றது.

நீர்த்தேக்கத்தின் கட்டுப் பகுதியில் 33 ஊர்காவலர் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (உ-3)

### யாழ். டி. ஐ. ஜி அலுவலகம்

யாழ். கோட்டை மணிக்கூட்டுக்கோபுரத்துக்குச் சமீபமாகவுள்ள — முன்னர் ராஜதந்திர சேவையில் இருந்த ஒருவரின் வீட்டுக்குப் பக்கத்தில் - தனியார் கட்டடம் ஒன்றில் யாழ் மாவட்டத்துக்கான பிரதி பொலீஸ் மா அதிபரின் அலுவலகம் திறந்து வைக்கப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# நிதித்துறை அறிவித்தல்
## வைப்பகத்திற்கு வருக

கீழ்க்குறிப்பிடுவோரை கச்சாய் வீதி, சாவகச்சேரியில் அமைந்துள்ள தமிழீழ வைப்பகத்திற்கு இன்று காலை 10.00 மணிக்கு அடையாள ஆவணங்களுடன் வருகை தருமாறு தமிழீழ விடுதலைப் புலிகளின் நிதித்துறை கேட்டுள்ளது.

★ சதாசிவம் செல்வகுமார் — பாரதி வீதி, நாயன்மார்கட்டு.

★ வேலாயுதபிள்ளை லோகதாஸ் -- புண்ணியர் மடம், நாயன்மார்கட்டு.

★ சட்டநாதர் செல்லையா— கந்தரோடை மேற்கு, சுன்னாகம்.

★ சண்முகம் பஞ்சாட்சரம் — இல 39, பெலப்பர் ஒழுங்கை, அரியாலை மேற்கு.

★ சின்னத்தம்பி தவநாயகம் — மே/பா பி. பஞ்சநாதன், மாசிவன் சந்தி, நீர்வேலி வடக்கு.

★ இரத்தினசபாபதி இரகுபதி—''ராஜ்பவன்'', சேர் பொன் இராமநாதன் வீதி, திருநெல்வேலி தெற்கு

★ குமரேசு ரங்கநாதன் — சிறி விக்கினேஸ்வரா வீதி, அச்சுவேலி,

★ கனகலிங்கம் இராசயோகம் — 395/3, நாவலர் வீதி, நல்லூர்.

★ வேலன் ஐயாத்துரை — பாரதி வீதி, கோண்டாவில் மேற்கு, கோண்டாவில்.

★ மீனாசி தர்மலிங்கம் சொர்ணம் — அன்னங்கை, கோண்டாவில் வடக்கு.

★ ஐயாத்துரை பிள்ளையாமணி — அன்னங்கை, கோண்டாவில் வடக்கு.

★ மீனாசி நவரட்ணம் (இராசலிங்கம்)—சூராவத்தை, சுன்னாகம்.

★ தர்மர் லங்காதேவி (சின்னையா) – காரைக்கால், இணுவில் கிழக்கு.

★ கந்தையா சத்தியசீலன் (மனேஜர்) — நவாலி தெற்கு, மானிப்பாய்.

★ சிவசாமி தர்மகுலசிங்கம் — 149/07, நான்காவது ஒழுங்கை, அரசடி வீதி, கந்தர்மடம்.

★ சேனாதிராசா பரமேஸ்வரி அல்லது செல்லப்பா சேனாதிராசா — கண்ணகை அம்மன் கோவிலடி, இணுவில் மேற்கு.

★ ஜெயராசா மகேந்திரராணி — விதானையார் ஒழுங்கை, கோப்பாய் தெற்கு.

★ சதாசிவம் பாலகிருஷ்ணன் (அஞ்சல் அலுவலகர்) — குப்பிளான், சுன்னாகம்.

★ இராசையா மதியழகன்—டச்சு வீதி, மானிப்பாய்.

★ இராசையா கலையழகன் — இராசபாலன் இல்லம், தாவடி தெற்கு, கொக்குவில்.

கச்சாய் வீதி சாவகச்சேரியில் உள்ள தமிழீழ வைப்பகத்துக்கு நாளை 02-01-96ஆம் திகதி காலை 10-00 மணிக்கு அடையாள ஆவணங்களுடன் வருகை தருமாறு கேட்கப்பட்டுள்ளோர்:

★ இராசு ரவீந்திரன் (பெயின்ரிங் வேலை செய்பவர்) — 19, டேவிற் றோட், யாழ்ப்பாணம்

★ சி. நவரட்ணம் — கலைவாணி றோட், கோண்டாவில் வடக்கு.

★ நவரட்ணம் திருச்சந்திரன் — தம்பிமுத்து வாத்தியார் வீதி, சுன்னாகம் மேற்கு.

★ வேலுப்பிள்ளை இராசையா— 30, கலைவாணி ஒழுங்கை, கொக்குவில் கிழக்கு.

★ கே. முத்துத்தம்பி — மே/பா கந்தர் சுப்பிரமணியம், கோப்பாய் வீதி, உரும்பராய்.

★ திருமதி சாந்தி கஜேந்திரன்— கஜேசா மெடிக்கல் கிளினிக், கட்டுடை, மானிப்பாய்.

★ தம்பு சுப்பிரமணியம் அல்லது திருமதி இராசம்மா சுப்பிரமணியம் — சிவகுல வீதி, உரும்பிராய் தெற்கு.

★ கணபதி மகாலிங்கம் அல்லது திருமதி றோசம்மா மகாலிங்கம் — 'தாயகம்', சிவகுல வீதி, உரும்பிராய் தெற்கு.

★ திருமதி ஜீவா சபாரட்ணம் — 42, அச்சக வீதி, யாழ்ப்பாணம்.

★ திருமதி தையல்நாயகி சச்சிதானந்தம் — செட்டியார்மடம். அராலி வடக்கு, வட்டுக்கோட்டை.

★ திரு. கார்த்திகேசு இராமச்சந்திரன் — சந்தை, பண்டத்தரிப்பு.

★ சுப்பிரமணியம் சிவசத்தியநாதன் — 80, சபாபதி வீதி, யாழ்ப்பாணம்.

★ சின்னத்தம்பி பூபாலசிங்கம் — மே/பா இளையதம்பி, அம்பனை, சுன்னாகம் மேற்கு.

★ திருமதி கமலா பாலசிங்கம் — பாடசாலை ஒழுங்கை, தாவடி தெற்கு.

★ திருமதி செல்லம்மா சின்னப்பா — அரசடி வீதி, வடலியடைப்பு, பண்டத்தரிப்பு.

★ திருமதி நவசிவாயம் செல்வராசா—பன்குரு வைரவர் லேன், வட்டுக்கோட்டை மேற்கு.

★ கனகரத்தினம் நடராசா அல்லது புவனேஸ்வரி கனகசிங்கம் — 291/1, கண்டி வீதி, அரியாலை.

★ திருமதி பத்மாவதி பாலசுப்பிரமணியம் — கல்லூரி ஒழுங்கை, மானிப்பாய் தெற்கு.

★ திருமதி சறோ எட்வேட் (பேபி) — 83/4 பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.

★ லலிதாகுமாரி குகேந்திரராசா (கட்டி) — பிள்ளையார் கோவிலடி, தொண்டமனாறு.

★ பூமணி ஆறுமுகம் — சங்கானை மேற்கு, சித்தன்கேணி.

★ குட்டித்தம்பி தேவபாலன் — ''அன்பகம்'', சங்கானை மேற்கு, சித்தன்கேணி.

★ நாகலிங்கம் செல்வரத்தினம் (இளைப்பாறிய ஆசிரியர்) — கோட்டைக்காடு, ஏழாலை மேற்கு, சுன்னாகம்.

★ சின்னத்தம்பி விக்கினராசா — இலகடி, மாவிட்டபுரம், தெல்லிப்பளை.

★ சின்னத்தம்பி கந்தையா — ஆஸ்பத்திரி வீதி, சங்கானை.

★ நடராஜா நித்தியானந்தன் — மாதகல் மேற்கு, மாதகல்.

★ திருமதி திலகராசா தவம் — பெரிய கடற்கரை, தொண்டமனாறு.

★ வல்லிபுரம் துரைராஜா — இல. 7, காரைக்காடு வீதி, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.

★ திருமதி புஸ்பலீலா ஜீவராஜா (ஆசிரியை) — பிளாக்வீதி, நாகலிங்கசாமி வீதி, சங்கானை கிழக்கு, சங்கானை.

★ ஆறுமுகம் நவரத்தினம் அல்லது பவளம் பாலா — மீசாலை கிழக்கு, மீசாலை,

★ பொன்னம்மா பொன்னம்பலம் அல்லது சரவணமுத்து இளையபிள்ளை — மே/பா, செல்லையா, கிழக்கு வீதி, மட்டுஅம்மன் கோவிலடி, மட்டுவில்.

★ [illegible] — சுன்னாகம் கிழக்கு.

# புதிய ஆண்டில் 15 கடற் கலங்கள் ஸ்ரீலங்கா கடற்படை வாங்கும்

கொழும்பு, ஜன. 1

புதிய ஆண்டில் 15 நவீன கலங்களை ஸ்ரீலங்கா கடற்படை கொள்வனவு செய்யவுள்ளதாக ''லங்காதீப'' பத்திரிகை தெரிவித்துள்ளது.

இதற்கான நிதி தற்போதே ஒதுக்கப்பட்டுள்ளதாம்.

கொள்வனவு செய்யவுள்ள கடற்படைக் கலங்களைப் பரீட்சித்து அவற்றை சிறிலங்காவிற்குக் கொண்டு வருவதற்காக அதிகாரிகள் குழு ஒன்று அக்கலங்களை உற்பத்தி செய்யும் நாட்டிற்கு செல்லவுள்ளதாம்.

நவீன உபகரணங்கள் பொருத்தப்பட்டுள்ள இக்கலங்கள் வடக்குக் கிழக்குக் கடற்பிரதேசங்களில் பாதுகாப்புப் பணிகளில் ஈடுபடுத்தப்படும்.

சிறிலங்கா கடற்படைக்குச் சொந்தமான 'அபீதா' என்ற கப்பல் பழுது பார்க்க முடியாத அளவிற்குச் சேதமடைந்துள்ளதால் அக்கப்பல் சேவையிலிருந்து நீக்கப்பட்டு தற்போது காலி துறைமுகத்தில் நங்கூரமிடப்பட்டு தரித்து நிற்கின்றது.

இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் சிங்கப்பூரிலிருந்து கொள்வனவு செய்யப்பட்ட ''அபீதா'' ஆரம்பத்தில் சிறிலங்கா கடற்படையின் கண்காணிப்புப் பணிகளில் ஈடுபடுத்தப்பட்டது பின்னர் இக் கப்பல் கடற்படையினருக்கு தேவையான பொருள்கள், எரிபொருள் ஆகியவற்றை ஏற்றியிறக்கப் பயன்படுத்தப்பட்டது

(உ-10)

# ஜனாதிபதியைச் சந்திக்க 5 தமிழ்க் கட்சிகள் முயற்சி

கொழும்பு, ஜன.1

அரசின் தீர்வுத் திட்டம் நாடாளுமன்றத் தெரிவுக் குழுவிடம் சமர்ப்பிக்கப்படுவதற்கு முன்னர் அது குறித்து பேச்சு நடத்துவதற்கு தங்களுக்கு சந்தர்ப்பம் வழங்கும்படி ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவை நான்கு தமிழ்க் கட்சிகள் கோரியுள்ளன.

ஈ. பி. ஆர். எல். எவ். புளொட், ரெலோ, ஈரோஸ் ஆகிய நான்கு தமிழ்க் கட்சிகளுமே ஜனாதிபதியைச் சந்திப்பதற்கு நேரம் ஒதுக்கித் தருமாறு கோரியுள்ளதாக அறிவிக்கப்படுகுறது.

தீர்வுத் திட்டத்தில் வடக்கு—கிழக்கு இணைப்பு, வடக்கு—கிழக்கில் சட்டவிரோதவாகக் குடியேறியோரை அகற்றுதல், சிறுபான்மையினர் தொடர்பாக நாடாளுமன்றத்தின் இரண்டாவது சபை ஒன்றை அமைத்தல், சிறுபான்மையினர் ஒருவரை உப ஜனாதிபதியாக நியமித்தல் போன்றவை தொடர்பான சில திருத்தங்களை ஈ. பி. ஆர். எல். எவ். நெரிவிந்துள்ளது.

## ஆக்கிரமிப்புப் பிரதேசத்தில்

# அடையாள அட்டைகள் வழங்கும் வேலை ஆரம்பம்

கொழும்பு, ஜன. 1

படையினரின் கட்டுப்பாட்டின் கீழ் இருந்துவரும் யாழ்ப்பாணத்தில் பத்து வயதுக்கு மேற்பட்ட அனைவருக்கும் அடையாள அட்டை வழங்கும் வேலை கடந்த வியாழக்கிழமை ஆரம்பிக்கப்பட்டதாக இலங்கை வானொலி தெரிவித்தது.

இதற்காக கொழும்பு ஆள் பதிவுத் திணைக்களத்தில் இருந்து எட்டு அதிகாரிகள் யாழ்ப்பாணம் வந்துள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

காங்கேசன்துறையில் உள்ள சிவில் நிர்வாக அலுவலகத்தில் இருந்து இவர்கள் செயற்படுகின்றனர் என்றும் —

அடையாள அட்டை வழங்கும் வேலை இரு வாரங்களில் பூர்த்தியானதும், அப்பிரதேசத்தில் முகாம்களில் தங்கியிருப்போர் வீடுகளுக்குச் செல்ல அனுமதிக்கப்படுவர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இதற்கிடையில் —

ஆக்கிரமிக்கப்பட்ட பகுதிகளில் உள்ள இளைஞர்களுக்கு விசேட அடையாள அட்டைகள் வழங்குவது என்ற முடிவை கொழும்பு தமிழ் நடவடிக்கை குழு கண்டித்துள்ளது.

அரசியல் சாசனத்தின் அடிப்படை உரிமைகளை மீறுவதாக இந்த நடவடிக்கை அமைந்திருக்கிறது என்று மேற்படி குழுவின் தலைவர் டாக்டர் கே. வேலாயுதம்பிள்ளை கொழும்பில் வெளியிட்ட அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

(உ-இ-3)

# செஞ்சிலுவை சங்க வைத்திய சேவை

இலங்கை செஞ்சிலுவைச் சங்க, யாழ். கிளை, இடம்பெயர்ந்து உறவினர்கள், நண்பர்கள் வீட்டில் தங்கியுள்ள மக்களின் நலன்கருதி பருத்தித்துறையிலும், கரவெட்டியிலும் வைத்திய சேவை செய்துவருகின்றது.

திங்கட்கிழமையில் பி. ப. 3 மணிக்கு பருத்தித்துறை வி. எம். வீதியில் இயங்கும் யாழ். கிளை காரியாலயத்திலும்,

வியாழக்கிழமையில் பி. ப. 2 மணிக்கு நெல்லியடிச் சந்தியில் இயங்கும் பிரிவுக் காரியாலயத்திலும் இச் சேவை நடைபெற்று வருகின்றது.

இதைத் தவிர வடமராட்சியில் இயங்கும் இடம்பெயர்ந்தோர் நலன்பேண் நிலையங்களில் செஞ்சிலுவைச் சங்க நடமாடும் வைத்தியசேவை நடைபெற்று வருகிறது. (இ-173)

# 5 வைத்திய அதிகாரிகளை கிளிநொச்சிக்கு அனுப்புக!

## அரச அதிபர் கோரிக்கை

கிளிநொச்சி, ஜன. 1

கிளிநொச்சி அரசாங்க ஆஸ்பத்திரிகளில் நோயாளர்கள் நிரம்பி வழிவதாகவும் —

வைத்தியசாலைக்கு உடனடியாக 5 வைத்திய அதிகாரிகளையும், உதவி அதிகாரிகளையும், மருத்துவ உபகரணங்களையும், மருந்து வகைகளையும் அனுப்பி வைக்குமாறும் — கிளிநொச்சி அரசாங்க அதிபர் எஸ். தில்லை நடராஜா அரசாங்கத்தைக் கோரியுள்ளார்.

கிளிநொச்சி மாவட்டத்தின் நிலைமை குறித்தும் அத்தியாவசிய தேவைகள் குறித்தும் அரசுக்கு அவர் அனுப்பி வைத்துள்ள அறிக்கையிலேயே மேற்கண்ட கோரிக்கையும் விடப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்ட நோய்த் தடுப்பு நடவடிக்கைகளுக்காக 24 ஆயிரம் கிலோ மலத்தியோன், அதனைத் தெளிப்பதற்குரிய மேலதிக தெளிகருவிகள், மற்றும் 12 ஆயிரத்து 500 கிலோ குளோரின் ஆகியவற்றையும் உடனடியாக அனுப்பி வைக்கும்படி அரசாங்க அதிபர் தனது அறிக்கையில் கோரியுள்ளார்.

அரச அதிபரின் கோரிக்கைக்கு இணங்க —

குளோரின் வில்லைகள், மலத்தின் தெளிக்கும் கருவிகள் என்பனவற்றை அங்கு அனுப்பி வைக்கும் நடவடிக்கைகளை சுகாதார அமைச்சு எடுத்துள்ளது என்றும் —

ஏனைய மருந்து வகைகள் மற்றும் ஊழியர்களை கிளிநொச்சிக்கு அனுப்பி வைக்க அரசு தீர்மானித்துள்ளது என்றும் —

கிளிநொச்சியில் நடமாடும் வைத்திய கிளினிக் ஒன்றையும் சுகாதார அமைச்சு நடத்தவுள்ளது என்றும் —

அரசுத் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

(உ-இ-3)

## கல்குடா கடல் ஊடாக ஊடுருவி

# கிழக்கில் பெரும் தாக்குதல் நடத்த புலிகள் திட்டமாம்!

கொழும்பு, ஜன. 1

கிழக்கின் முக்கிய சில நகரங்கள் மீது பெரும் தாக்குதல் ஒன்றை நடத்துவதற்கு விடுதலைப் புலிகள் தீட்டியிருந்த திட்டம் குறித்து கிழக்குப் பகுதி இரகசியப் புலனாய்வுப் பிரிவுக்கு கடந்த வியாழனன்று தகவல் கிடைத்திருப்பதாக கொழும்பு சிங்களப் பத்திரிகை ஒன்று தெரிவித்துள்ளது.

சுமார் இரண்டாயிரம் வீரர்களைக் கொண்ட புலிகளின் படை ஒன்று கல்குடா கடற்கரையினூடாகப் பிரவேசித்து இத்தாக்குதலை நடத்த திட்டம் தீட்டியுள்ளனராம். (உ-6)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# உதயன்

## பிறக்கும் புதிய ஆண்டில்

1996 ஆம் ஆண்டு இன்று மலர்கின்றது. புதிய ஆண்டு பிறக்கும்போது அந்த வருடம் தமக்கு நல்லது செய்வதாக அமைய வேண்டும் என்று ஒவ்வொரு மனிதனும் தனக்குள்ளே விரும்புகிறான்.

ஈழத் தமிழ் மக்களைப் பொறுத்தவரையில் புதிய ஆண்டாவது தங்களுக்கு விடிவைத் தருமா என்ற ஆதங்கத்துடனேயே அவர்களுக்கு இன்றைய புத்தாண்டு புலர்கிறது.

கடந்து பல வருடங்களாகத் தாம் அனுபவித்து வரும் அவலங்களும், இன்னல்களும், துன்பங்களும் நீங்கி — விடுதலை பெற்ற மனிதர்களாக, தன்னாட்சி உரிமையுள்ளவர்களாக, அடக்குமுறையிலிருந்து விடுபட்டவர்களாக, பாதுகாப்புடன், நிம்மதியாக வாழ்வதற்கு இந்த வருடத்திலாவது வழி பிறக்குமா என்ற ஏக்கம் ஒவ்வொரு ஈழத்தமிழன் நெஞ்சத்திலும் இன்று எழும்.

தமிழர் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு, சமாதானம், அமைதி என்று கூறிக்கொண்டு பதவிக்கு வந்த சந்திரிகாவின் ஆட்சியில், 1995இல் தமது துன்பங்கள், அவலங்கள் நீங்கும் என்று தமிழர் நம்பினர். ஆனால் எதிர்மாறாகவே நடந்தது. போர், இரத்தக்களரி, உயிரழிவு, உடைமைச் சேதம், இடம்பெயர்வு என்று கடந்த ஆண்டில் ஒரே துன்பியல் நிகழ்வுகளே நீக்கமற நிலவின.

இவை எல்லாவற்றுக்கும் உச்சக்கட்டமாக ஈழத்தமிழர்களின் நாகரிக மையமான யாழ்ப்பாணத்தை இராணுவம் — அரசாங்கம் — ஆக்கிரமித்தமையும், அதற்கு முன்னர் வலிகாமம் பகுதி மக்கள் அங்கிருந்து லட்சக்கணக்கில் வெளியேறி இடம்பெயர்ந்தமையும் அமையும்.

அதனைத் தொடர்ந்து அரசு என்ன செய்யப்போகிறது என்பதுடனேயே இவ்வருடத்துக்கான அரசியற் காட்சியின் திரை விலகுகிறது

தமிழீழ விடுதலைப் புலிகள் தமது அரசியல் நிலைப்பாட்டை தெளிவுபடுத்தியிருக்கின்றனர். சர்வதேச மத்தியஸ்தத்துடன் பேச்சுவார்த்தை; இராணுவம் தான் ஆக்கிரமித்த பகுதிகளிலிருந்து வெளியேறவேண்டும்; இடம்பெயர்ந்த மக்கள் தமது சொந்த இடங்களுக்குத் திரும்பிய பின்னரே பேச்சுவார்த்தை நடத்தமுடியும்; என்பதே விடுதலைப் புலிகளின் மூன்றம்ச அரசியல் நிலைப்பாடாகும்.

ஆனால் அரசாங்கம் அதனை ஏற்றுக்கொள்ளத் தயாராக இல்லை. சர்வதேச மத்தியஸ்தம் சந்திரிகா அரசுக்கு 'அலேர்ஜி' ஆகிவிட்டது. தாம் ஆக்கிரமித்த யாழ்ப்பாணத்தைக் கைவிடவும் தயாராக இல்லை.

யாழ்ப்பாணத்தைத் தனது அரசியல் சதுரங்கத்தின் பிரதான காயாக நகர்த்த முயல்கிறார் சந்திரிகா. அது மட்டுமன்றி விடுதலைப் புலிகள் ஆயுதங்களைக் கீழே போடவேண்டும் என்றும் நிபந்தனை விதிக்கிறார்.

அரசியல் தீர்வு ஒன்றை எட்டக்கூடிய சாத்தியம் மிகப் பெரியளவில் சுருங்கி வருகிறது என்பதற்கான அறிகுயே இதுவாகும்.

இரு பக்கங்களும் தமது நிலைப்பாடுகளை இறுகிப் பிடிக்க, அரசியல் நெருக்கடி ஒன்றை முன் வைத்தே புதிய ஆண்டு பிறக்கிறது. இந்நிலை நீடிக்காமல், திருப்பமும் மாற்றமும் விளைய வேண்டுவோம்.

---

சர்ச்சைக்குள்ளான 'ஏ. என். - 26' ரக

# விமானம் சென்னை சென்ற சமயம் புலிகளுக்கு ஆயுதங்கள் இறக்கியது

## "த ஸ்டேட்ஸ்மன்" பத்திரிகை தகவல்

சென்னை, ஜன. 1

மேற்கு வங்காளம் புருலியா மாவட்டத்தில் பரசூட் மூலம் ஆயுதங்களைப் போட்ட விமானம் என்று சர்ச்சைக்குள்ளாகியிருக்கும் ''ஏ. என். — 26'' ரக விமானம், தமிழ்நாடு சென்னையில் தரையிறங்கிய சமயம் பெரும் தொகையான ஆயுதங்களை புலிகளுக்கும் இறக்கியுள்ளது.

சென்னை மீனம்பாக்கம் விமான நிலையத்தில் இந்த விமானம் தரையிறங்கிய சமயம் அதிலிருந்து இறங்கிய இருவர், விடுதலைப் புலிகளுக்கு கையளிக்கவேண்டிய ஆயுதங்களுடன் தலைமறைவாகிவிட்டனர்.

இந்தியாவின் பிரபல தேசிய நாளிதழான ''த ஸ்டேட்ஸ்மன்'' பத்திரிகை இவ்வாறு செய்தி வெளியிட்டிருக்கின்றது.

''விடுதலைப் புலிகளுக்கு ஆயுதம் வழங்குவதற்காக விமானம் சென்னையில் தரையிறங்கியது''— என்ற தலைப்பில் இந்தச் செய்தி வெளியாகியிருந்தது.

மேற்படி விமானம் இருபது கோடி ரூபாவுக்கும் (இந்தியப் பணத்தில்) அதிகமான மதிப்புடைய ஆயுதங்களை புருலியா மாவட்டத்தில் வீசியது என்பது தெரிந்ததே.

''த ஸ்டேட்ஸ்மன்'' பத்திரிகைச் செய்தியின்படி—

விமானம் வியாழக்கிழமை இரவு சென்னை மீனம்பாக்கம் விமான நிலையத்தில் இறங்கி தரித்து நின்ற சமயம், அதன் விமானி ஏனைய இரு உதவியாளர்களுடன் மூன்று கிலோமீற்றர் தொலைவில் உள்ள பழைய மீனம்பாக்கம் விமான நிலையத்துக்குச் சென்றுள்ளார்.

குடிவரவு, குடியகல்வு அனுமதியைப் பெறுவதற்கு இரவு 10 மணியளவில் அவர்கள் அங்கு சென்ற சமயம், விமானத்திலிருந்த ஏனையோர் கட்டுப்பாடு ஏதுமின்றி தம் விருப்பப்படி எங்கும் சென்று வரக்கூடியதாக இருந்தது என்று அப்பத்திரிகை சுட்டிக் காட்டியது.

கடந்த 17ஆம் திகதி பிற்பகல் 1-42 மணிக்கு பாகிஸ்தானில் கராச்சி நகரத்தை விட்டு இந்த விமானம் கிளம்பியது. பெட்ரோல் நிரப்புவதற்காக மாலை 5-42 மணிக்கு உத்தரபிரதேச மாநிலம் வாரணாசியில் தரையிறங்கியது. அங்கிருந்து கல்கத்தா செல்வதற்கு 2 மணி நேரம்தான் ஆகும். ஆனால் 5 மணி நேரத்துக்குப் பிறகுதான் அது கல்கத்தா போய் சேர்ந்து இருக்கிறது.

இடைப்பட்ட இந்த நேரத்தில்தான் புருலியா மாவட்டத்தில் ஆயுதங்கள் வீசப்பட்டு இருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுகின்றது.

### சென்னையில்

இரவு 10-40 மணிக்கு மேல் கல்கத்தாவில் இருந்து புறப்பட்டு 18ஆம் திகதி இரவு 8-25 மணிக்கு தாய்லாந்து நாட்டின் புருகத் நகரை அடைந்தது. மீண்டும் 21ஆம் திகதி (வியாழக்கிழமை) அங்கிருந்து சென்னைக்கு புறப்பட்டது. அன்று மாலை 8-25 மணிக்கு சென்னை விமான நிலையத்தில் இறங்கியது.

சிவில் விமான போக்குவரத்து அதிகாரிகளிடம் இருந்து உரிய அனுமதி பெற்றிருப்பதாக சென்னை விமான போக்குவரத்து கட்டுப்பாட்டு அலுவலகத்திற்கு தெரிவித்து அந்த விமானம் இறங்கியதாக சென்னை விமான நிலைய அதிகாரிகள் தெரிவித்தனர்.

இந்திய அரசிடம் ஏற்கனவே பெற்று இருந்த அனுமதியின்படி புருகத்திலிருந்து கிளம்பிய அந்த விமானம் பெட்ரோல் நிரப்புவதற்காக நேராக கல்கத்தா சென்று இருக்க வேண்டும். ஆனால் அது சென்னையை நோக்கி வந்தது ஏன் என்று கேள்வி எழுப்பட்டுள்ளது.

### தரை இறக்கப்பட்டது

விமானம் சென்னையை விட்டு புறப்பட்டதும் அதை பலவந்தமாக தரையிறங்கும்படி பம்பாயிலுள்ள விமான போக்குவரத்து கட்டுப்பாட்டு அதிகாரி மூலம் விமானிக்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

மொழி புரியாததால் முதலில் உத்தரவுக்கு அவர்கள் கீழ்ப்படியவில்லை. பின்னர் சர்வதேச சங்கேத மொழியில் கடும் எச்சரிக்கைவிட்ட பிறகுதான் விமானிகள் நிலைமையை புரிந்துகொண்டு பம்பாய் சாந்தக்குரூஸ் விமான நிலையத்தில் விமானத்தை தரை இறக்கினர்.

விமானம் கராச்சி நோக்கி சென்று கொண்டிருக்கையிலேயே அது பம்பாயில் பலவந்தமாகத் தரையிறக்கப்பட்டது.

ஆனால் விமானத்தை பொலீஸார் நெருங்கிய சமயம் விமானத்தில் வந்த கூட்டத்தின் தலைவர் என்று கருதப்படும் நபர் அதில் இருக்கவில்லை. அவர் எங்கோ 'நைஸாக' தலை மறைவாகிவிட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது. கிம் பல்கிறெச் பீற்றர் டேவ் என்ற நியூஸிலாந்து நாட்டுவாசியே தலைமறைவாகியுள்ளார். விமானமும் இவருடையதே என்று கூறப்பட்டது.

இவரைத் தவிர விமானத்திலிருந்த இங்கிலாந்து தேசத்தின் முன்னாள் ராணுவ அதிகாரி ஒருவரும், சோவியத் ரஷ்யாவிலிருந்து பிரிந்து சென்றுள்ள லத்வியா நாட்டைச்சேர்ந்த ஐவரும் கைதாயுள்ளனர்.

புருலியா மாவட்டத்தில் ஆயுதங்களை வீசியது தாங்களே என்று ஒப்புக்கொண்ட இவர்கள், தங்கள் விமானத்தில் ஆயுதங்கள் ஒளித்து வைக்கப்பட்டிருப்பதையும் காட்டியதாக பத்திரிகைச் செய்திகள் தெரிவித்தன.

(உ-10)

---

# திரவப் பணம் எடுத்துவர அனுமதி கிடைக்கவில்லை

சாவகச்சேரி, ஜன. 1

யாழ். மாவட்டத்தில் உள்ள அரச ஊழியர்கள் மற்றும் ஓய்வூதியர்களுக்கான சம்பளக் கொடுப்பனவுகளுக்கு திரவப்பணம் எடுத்துவர பாதுகாப்பு அமைச்சு அனுமதி வழங்கவில்லை எனத் தெரிவிக்கப்பட்டது.

கொழும்பில் இயங்கும் யாழ். அரச அதிபரின் அலுவலக அதிகாரிகளும், வங்கி அதிகாரிகளும் திரவப் பணத்தை எடுத்துவர கடந்த வாரம் முயற்சி மேற்கொண்டனர் என்றும் —

திரவப்பணம் எடுத்துச் செல்ல அனுமதி தரமுடியாது என பாதுகாப்பு அமைச்சு திட்ட வட்டமாகத் தெரிவித்து விட்டது என்றும் — அறிவிக்கப்பட்டுள்ளது.

திரவப்பணம் வடக்கே எடுத்துச் செல்ல பாதுகாப்பு அமைச்சு தடை விதித்துள்ளதாக மற்றொரு கொழும்பு செய்தி தெரிவித்தது.

புழக்கத்தில் திரவப்பணம் இல்லாமையால் அரச ஊழியர்களும், ஓய்வூதியர்களும் தமது காசோலைகளை மாற்ற முடியாது அலைவதைக் காணக் கூடியதாக இருக்கின்றது. (உ-3)

---

# மட்டு. காரைதீவில் விமானக் குண்டுவீச்சு!

மட்டக்களப்பு, ஜன. 1

ஸ்ரீலங்கா விமானப்படையின் 'புக்காரா' விமானம் ஒன்று மட்டக்களப்பு காரைதீவில் மக்கள் குடியிருப்புப் பகுதிகள் மீது கடந்த வெள்ளிக்கிழமை அதிகாலை குண்டுவீச்சுத் தாக்குதல்களை நடத்தியுள்ளது.

மக்கள் செறிந்து வாழும் பகுதிகளில் இந்தத் தாக்குதல்கள் நடத்தப்பட்டிருப்பதால் மக்கள் பெரும் பீதியுடன் காணப்படுவதாக வெரித்தாஸ் தெரிவித்தது.

[உ-7]

---

# காப்பரண்களுக்குள் சூது! 9 ஊர்காவலர்கள் கைது!!

கொழும்பு, ஜன. 1

இரவு நேரத்தில் கடமையின்போது காப்பரண்களுக்குள் சூது விளையாட்டில் ஈடுபட்டிருந்த 9 ஊர்காவற் படையினரை கெப்பிட்டிக்கொல்லாவ பொலீஸார் கைது செய்துள்ளனர்

பொலிஸ் அதிகாரி இரவு நேரத்தில் சோதனைக்குச் சென்றிருந்தபோது இந்த ஊர்காவற் படையினர் கைது செய்யப்பட்டனர் என்று 'திவயின' பத்திரிகை தெரிவித்தது.

(உ-10)

---

# வவுனியாவுக்கு மாற்றியதை ஆட்சேபித்து டி.ஐ.ஜி. வழக்கு

கொழும்பு, ஜன. 1

தன்னை வவுனியாவுக்கு இடம் மாற்றியதை ஆட்சேபித்து பிரதிப் பொலீஸ் மா அதிபர் ஒருவர் உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த அடிப்படை மனித உரிமை மீறல் மனுவை உயர் நீதிமன்றம் விசாரணைக்கு ஏற்றுக்கொண்டுள்ளது.

பிரதிப் பொலீஸ் மா அதிபர் நந்தன எஸ். பெரேரா தாக்கல் செய்துள்ள இந்த மனுவில் பொலீஸ் மா அதிபர், சட்டமா அதிபர் ஆகியோர் எதிர் மனுதாரர்களாகக் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

1993 இல் பிரதிப் பொலீஸ் மா அதிபராகத் தாம் நியமனம் பெற்றதாகவும் —

தமது தரத்தில் 14 பேர் இருக்கையில் தன்னை மாத்திரம் 14.09.95 ஆம் திகதியிலிருந்து வவுனியாவுக்கு பொலீஸ் மா அதிபர் இடம் மாற்றியது தமது அடிப்படை உரிமைகளை மீறிய செயல் என மனுதாரர் மனுவில் குறிப்பிட்டுள்ளார். (உ-10)

---

# நுணாவிலில் பெருமளவு கசிப்பு கண்டுபிடிப்பு!

## பலர் கைதாகினர்

தென்மராட்சி, ஜன. 1

வலிகாமம் பகுதியிலிருந்து இடம்பெயர்ந்த மக்களால் நுணாவில் கிழக்குப் பகுதியில் நடத்தப்பட்டு வந்ததாகக் கூறப்படும் ''கசிப்புக் குகை'' சாவகச்சேரி காவல் துறையினரால் கடந்த வெள்ளியன்று கண்டு பிடிக்கப்பட்டது.

காவல்துறையின் திடீர் சோதனையின் போது 200 லீற்றருக்கு மேற்பட்ட கோடாவும் பெருமளவு பரல்களில் கசிப்பும் கைப்பற்றப்பட்டன.

நிலத்தில் புதைக்கப்பட்டிருந்த மண்பானைகளில் காணப்பட்ட கசிப்பு காவல் துறையினரால் நிலத்தில் ஊற்றி அழிக்கப்பட்டது.

இந்த கசிப்பு உற்பத்தி தொடர்பாக 13 குடும்பங்களைச் சேர்ந்தவர்களை காவல்துறையினர் கைது செய்தனர்.

இதேவேளை கடந்த செவ்வாய்க்கிழமை மீசாலைப் பகுதியில் மூன்று குடும்பத்தவர்களால் உற்பத்தி செய்யப்பட்ட கசிப்பும் கோடாவும் சாவகச்சேரி காவல்துறையினரால் கைப்பற்றப்பட்டன.

(இ-117)

## மட்டக்களப்பில் வீரச்சாவு

மட்டக்களப்பு மாவட்டம் கறுவாத்தீவு என்னும் இடத்தில் வெள்ளியன்று விடுதலைப் புலிகளுக்கும், படையினருக்கும் இடையில் நடந்த மோதலில் போராளியான 2ஆம் லெப்டினன்ட் நாவேந்தன் (காசிப்பிள்ளை கைலாயபிள்ளை — மட்டக்களப்பு) வீர மரணமடைந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## கனகரத்தினம் இரத்தினசிங்கம்

அல்வாய் வடக்கு, கேரளாவோடையைச் சேர்ந்த கனகரத்தினம் இரத்தினசிங்கம் (31-12-95) நேற்று ஞாயிற்றுக்கிழமை காலமானார். இவர் பொன்னம்மாவின் அன்புக் கணவரும், பரராசசிங்கம் (கனடா) அவர்களின் அன்புச் சகோதரரும், இரத்தினரஞ்சினி (ஆசிரியை, யாழ். இந்து ஆரம்ப பாடசாலை), இராஜேந்திரம் (முன்னாள் பொறியியலாளர், சிமெந்துக் கூட்டுத்தாபனம்-தற்போது ஆஸ்திரேலியா), இராஜசுந்தரம் (கணக்காளர், புனர்வாழ்வு பிரிவு - தற்போது ஆஸ்திரேலியா), யோகேந்திரன் (காகிதக்கூட்டுத்தாபன தொழினுட்பவியலாளர் - தற்போது (கனடா), ரவீந்திரன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், அழகரத்தினம் (அதிபர், கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை), மனோராணி (ஆஸ்திரேலியா), பிரேமளா (ஆஸ்திரேலியா), ஸ்ரீரஜனி (கனடா) ஆகியோரின் அன்பு மாமனாரும், பிரியதர்ஷினி (யாழ். இந்து மகளிர் கல்லூரி), சுதர்ஷன் (யாழ். இந்துக் கல்லூரி), ரதி (ஆஸ்திரேலியா), மகிபன் (ஆஸ்திரேலியா), அகிலன் (ஆஸ்திரேலியா), கிருஷாந் (ஆஸ்திரேலியா), சுஷந்தி (ஆஸ்திரேலியா); நிரோஷிகா (கனடா), ஷோபிகா (கனடா) ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் (31-12-95) நேற்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 5 மணிக்கு அல்வாய் மேற்கில் நடைபெற்று பூதவுடல் பங்குவம்படி மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
த. அழகரத்தினம்
(அதிபர், கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை)

மே. பா. S T. நல்லையா,
அல்வாய் மேற்கு,
அல்வாய். (39757)

## தம்பிப்பிள்ளை செல்லப்பா

தெல்லிப்பழை கிழக்கு, விராங்கொடையை வசிப்பிடமாகக் கொண்டவரும் தற்போது கொடிகாமத்தில் இருந்தவருமாகிய தம்பிப்பிள்ளை செல்லப்பா நேற்று நண்பகல் காலமானார்.

இவர் காலஞ்சென்ற பாக்கியத்தின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற திருமதி பொன்னம்மா இராசரத்தினத்தின் அன்புத் தம்பியும், சிவானந்தன் (சுவிஸ்), செல்வநாயகி (பொன்பிள்ளை) ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (1-1-96) காலை 10 மணியளவில் பருத்தித்துறை வீதி, கொடிகாமத்தில் (மாவீரர் துயிலும் இல்லத்திற்கு அருகாமையில்), உள்ள இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கொடிகாமம் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும், இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி தயவுடன் கேட்டுக் கொள்கிறேன்.

தகவல்:
செல்வநாயகி (மகள்)
(பொன்பிள்ளை)

தற்காலிக முகவரி:-
பருத்தித்துறை வீதி,
கொடிகாமம். (39759)

## இரத்தினபூபதி பொன்னம்பலம்

இணுவிலைச் சேர்ந்த இரத்தினபூபதி பொன்னம்பலம் நேற்று (31-12-95) காலமானார்.

அன்னார் சுப்பையா பொன்னம்பலத்தின் அன்பு மனைவியும், பொன்மலர்செல்வி, பொன்தாமரை செல்வி, பொன்சிவசோதி, (சுவிஸ்), பொன்மோகன செல்வி (இணுவில் இந்துக் கல்லூரி மாணவி), பொன்மதிசெல்வி [இணுவில் இந்துக்கல்லூரி மாணவி] ஆகியோரின் தாயாரும், சிவபாதம் (சிவா பலசரக்கு மாளிகை, கோண்டாவில்), புஸ்பராசா (ஆசிரியர், தமிழ் கந்தையா மகா வித்தியாலயம், கந்தரோடை) ஆகியோரின் மாமியாரும், யோகலட்சுமியின் அன்பு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (1-1-96) பிற்பகல் 2 மணியளவில் மீசாலையில் நடைபெற்று பூதவுடல் கொற்பிளவு இந்து மாயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சு. பொன்னம்பலம்
(கணவர்)

மீசாலை கிழக்கு,
மீசாலை. (39760)

# மீண்டும் யாழ். சென்று குடியேற இடம்பெயர்ந்த முஸ்லிம்கள் தயார்!

கொழும்பு, ஜன 1

யாழ்ப்பாணத்தில் இருந்து வெளியேறிய முஸ்லிம்கள் மீண்டும் யாழ்ப்பாணம் செல்ல விருப்பம் தெரிவித்துள்ளனர் என்று 'தினமின' சிங்களப் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

யாழ்ப்பாணத்தில் இருந்து வெளியேறி பல இடங்களிலும் வாழும் 30 ஆயிரம் முஸ்லிம் மக்களை பிரதிநிதித்துவப்படுத்தும் அமைப்பின் பிரதிநிதிகள் வீடமைப்பு நிர்மாண, பொது வசதிகள் அமைச்சரும், யாழ் புனரமைப்புக்குப் பொறுப்பான செயலணிக் குழுவின் தலைவருமான நிமால்சிறிபால டி சில்வாவைச் சந்தித்து தமது விருப்பத்தை தெரிவித்துள்ளனர்.

தாம் முன்பு வசித்த வீடுகளிலேயே தம்மை குடியேற்றுமாறும் அவர்கள் அமைச்சரிடம் கேட்டுள்ளனர்.

—இவ்வாறு அந்தச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-3-6)

## அமைதித்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ணம் செய்யப் போவதாகக் கூறும் ஆக்கிரமித்த பகுதியில் குறைந்த எண்ணிக்கையான மக்களே இப்போது வாழ்கிறார்கள். —

அங்கிருந்து இடம்பெயர்ந்த இலட்சக் கணக்கான மக்கள் போதிய உணவு, உறையுள், சுகாதார வசதிஇன்றி மிகவும் சீர்குலைந்த இழிநிலையில் வாழ்கின்றனர். இவர்களின் துயர்களைத் துடைப்பதற்கு பெருமளவு உதவி தேவைப்படுகிறது. —

இராணுவ நடவடிக்கைகளால் இடம்பெயர்ந்த மக்கள் தமது பகுதிகளிலிருந்து இராணுவம் விலக்கப்பட்டால் அன்றி தமது இருப்பிடங்களுக்குத் திரும்பிச் செல்ல மாட்டார்கள். —

வடக்கு, கிழக்குப் பகுதிகள் முழுவதிலும் சமாதானம் மீண்ட பின்னர் மாத்திரமே அங்கு புனரமைப்பு, புனர்நிர்மாண வேலைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். அதுவும் சம்பந்தப்பட்ட மக்களின் ஒத்துழைப்புடன்தான் அவற்றை மேற்கொள்ள முடியும். —

ஸ்ரீலங்கா அரசு தனது இராணுவ நடவடிக்கைகளாலும், நிர்வாக அடக்கு முறைகளாலும் நெடியதொரு போருக்கே அத்திவாரமிட்டுள்ளது. மேலும் கடுமையான இராணுவ மோதல்களுக்கு இடமாகக்கூடிய ஒரு பிரதேசத்தில் புனரமைப்புத் திட்டமொன்றை மேற்கொள்வது புத்திசாலித்தனமானதல்ல —

ஸ்ரீலங்கா அரசின் அடக்குமுறைச் செயல்கள் யாவும் நீக்கப்பட வேண்டும் என்பதே வடபகுதி மக்களின் அத்தியாவசிய தேவையாகும். — என்று அந்த மகஜரில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

ஸ்ரீலங்கா அரசு தனது இப்போதைய இராணுவ அணுகுமுறையைக் கைவிட்டு, விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தி, இனப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பதென்ற முன்னைய நிலைப்பாட்டுக்கு அரசு திரும்பினால் மட்டுமே அமைதித் தீர்வு சாத்தியமாகும் என்றும் அந்த மகஜரில் எடுத்துக் கூறப்பட்டுள்ளது. (அ)

## அரசுத்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

குறித்து கூர்மையாக அவதானிக்கப்படும் என்று ஜனாதிபதி பதிலளித்தார்.

ஜனாதிபதியின் இந்த எச்சரிக்கை பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அரசில் ஊழல் மலிந்துள்ளதையே காட்டுவதாக வெரித்தாஸ் வானொலி தெரிவித்தது.

பொதுமக்கள் ஐக்கிய முன்னணி தனது தேர்தல் விஞ்ஞாபனத்தில் ஊழலற்ற அரசு ஒன்றைத் தாம் உருவாக்கப் போவதாக வாக்குறுதி அளித்திருந்தது என்பது குறிப்பிடத்தக்கது. (உ-3-7)

## வசந்தராஜாவை...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

அது பற்றிய தகவலால் எரிச்சலுற்ற இந்திய அதிகாரிகள் தங்களை நாட்டுக்குள் அனுமதிக்காமல் திருப்பியனுப்பியிருக்கக்கூடும் என்றும் —

திரு. வசந்தராஜா தெரிவித்தார். [உ-6-7]

## பேச்சுக்கு...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

துருப்புகளை கிழக்கே அனுப்ப வேண்டிய நிர்ப்பந்தம் அரசுக்கு ஏற்பட்டுள்ளது.

அப்படித் துருப்புக்களை அனுப்பினால், வடக்கில் புலிகளின் கட்டுப்பாட்டில் இருக்கும் பகுதிகளில் தாக்குதலை நடத்ம் அரசின் திட்டம் பாதிப்புற்றுவிடும்.

இராணுவத்துக்கு பெரும் எடுப்பில் ஆட்திரட்டும் முயற்சி மேற்கொள்ளப்பட்டாலும் வடக்கிலும், கிழக்கிலும் ஒரே சமயத்தில் தாக்குதலை மேற்கொள்ளும் அளவுக்கு அரச துருப்புகள் படைபலம் கொண்டவையல்ல.

இரு தரப்பும் பேச்சுக்குத் தயார் என அறிவித்துள்ள போதிலும் விதிக்கப்படும் நிபந்தனைகள் பேச்சுக்கு வாய்ப்பில்லை என்பதையே கோடி காட்டுகின்றன — என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-6-7)

## வார்ட் அமைப்பு

தென்மராட்சி, ஜன. 1

பளை வைத்தியசாலையில் வார்ட்டில் தங்கிச் சிகிச்சை பெறும் நோயாளர் தொகை அதிகரித்துள்ளதையடுத்து நோயாளர் நலன்புரிச் சங்கத்தினர் புதிய வார்ட்டினை அமைத்துள்ளனர். (உ-117)

## தமிழரின்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பத்தாயிரம் மக்கள் இருப்பதாகத் தெரிய வந்துள்ளது.

★ வடபகுதியில் ஏனைய இடங்களில் இராணுவ ரீதியில் நடவடிக்கைகளை மேற்கொண்டால் பெரும் உயிர்ச்சேதம் ஏற்படும் என்பது அரசுக்குத் தெரியும்.

★ பாதுகாப்புப் படையினர் விடுதலைப் புலிகளால் தாக்கப்பட்டாலே தவிர, தாமாக தாக்குதலில் ஈடுபட மாட்டார்கள்.

★ 1996 ஆம் ஆண்டு முக்கிய வருடமாக அமையும்.

## புலிகள்...

(5 ஆம் பக்கத் தொடர்ச்சி)

| | | |
|---|---|---|
| ★ கிளைமோர் வெடிக்க வைக்கும் கருவி | — | 1 |
| ★ இரவுநேரக் கண்காணிப்பு கருவி | — | 1 |
| ★ பி.கே. செயின் பெட்டி | — | 1 |
| ★ பி.கே. லிங்குடன் ரவை | — | 400 |
| ★ பரா வெளிச்சக் குண்டு | — | 3 |
| ★ கைக்குண்டுகள் | — | 5 |
| ★ நடுத்தர ரவைகள் | — | 910 |
| ★ வயர் றோல் | — | 2 |

(உ-3)


## இடமாற்றம்

180, பிரதானவீதி, யாழ்ப்பாணத்தில் இயங்கி வந்த

**வெள்ளை மாளிகை**
**அந்தியகால சேவை**
**(WHITE HOUSE FUNERAL SERVICES)**

தற்பொழுது பெரிய அரசடி சந்தி, சங்கத்தானை, சாவகச்சேரியில் இயங்கி வருகிறது என்பதை அறியத்தருகின்றோம்.

— இரவு பகல் சேவை —

(39743)


மேலும் மரண அறிவித்தல் இரண்டாம் பக்கத்தில்


## யாழ். அருள்முருகன் நகையகத்தின் புதுவருட வாழ்த்துக்கள்!

யாழ். கஸ்தூரியார் வீதியில் இயங்கிய எமது **அருள்முருகன் நகையகம்** தற்போது எமது கிளை ஸ்தாபனமான சாவகச்சேரி— யாழ். வீதியில் உள்ள **சிவா நகை மாடத்துடன்** இணைந்து இயங்கி வருகின்றது என்பதை எமது வாடிக்கையாளர்களுக்கு மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

★ இப் புதுவருடத்தில் எமது நாட்டு மக்களுக்கு சுபீட்ச வாழ்வு கிடைக்க வாழ்த்துகின்றோம். ★

**அருள்முருகன் நகையகம்,**
96/1, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

**சிவா நகைமாடம்,**
யாழ். வீதி,
சாவகச்சேரி.

(39881)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட்டினரால் சாவகச்சேரி, சரசாலை தெற்கில் உள்ள அவர்களது தற்காலிகப் பணிமனையில் 01-01-96 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.